# வீரசிங்கன்

## யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

## மீசாலை


## 2005




## உயர்தர மாணவர் மன்றம்

# வீரசிங்கன்

யா / மீசாலை வீரசிங்கம் மகா
வித்தியாலயம்
மீசாலை
2005



உயர்தர மாணவர் மன்றம்

# சமர்ப்பணம்



எம் கிராமத்தின் கல்விக் கண்ணைத் திறந்திட
கல்விச்சாலை தந்த பெருமகனே
நின் தாள்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# வித்தியாலய கீதம்

## எடுப்பு

வாழ்க வீரசிங்கம் மகா வித்தியாலயம் வாழ்கவே
வாழ்க எங்கள் மீசாலை மாநகரில் ஒளிபரப்பி

(வாழ்க......)

## தொடுப்பு

விந்தை புரி வேம்படி விநாயகன் அருளினால்
சிந்தை தெளி பண்பொழுக்கம் கீர்த்தி திறன் நீட்டியே

(வாழ்க......)

## முடிப்பு

ஆத்ம ஞான போதமும் அற்புத விஞ்ஞானமும்
மேன்மை சேர தொழிற்றுறை பெருகட்டும் ஆங்கிலம்
நான் மறைகள் ஓதுகின்ற கீத இயல் ஆடலும்
பாண்மையோடு பயிலுகின்ற பைந்தமிழ்க் கல்லூரியே

(வாழ்க......)

## யா / மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

**DSD பாடசாலை**

# புது யுகம் படைக்கும் நவோத்யா (DSD)

மானிடன் கண்ட மனம் கனியும் படைப்பு
தேனினும் இனிய சிறு பராயம் மகிழ்ந்திடும் காலம்
நானிலம் மலர்ந்திடும் நயம்மிகும் நாளாம்
வானிலும் மண்ணிலும் போற்றிடும் பிள்ளைப் பருவம்

அதனை

வீதியில் வீணே கழித்திடும் கொடுமை காணலாமோ
விருப்புடன் நீரும் விளங்கிடும் விலகிடும் ஆங்கே
வீம்பினில் சிக்கி வீண்பழி கேட்பீர் இன்றே விலகிடும்
வித்தை கற்றிட வீறுடன் நடப்பீர் நவோதயா வழி

தூரத்தில் தெரிவது தூறிலா வானம் - அது
தூய அறிவை துலக்கிடும் பள்ளிக் கூடம்
சேருவீர் அதனில் சேர்த்திடுவீர் சேவைகள் பெருக
பாடுவீர் கலைக்கூடம் களிக்கும் கலைக்கூடம் - என்றே

கற்றிட வழி அமைத்திடும் கல்விக்கழகம்
காசற்ற நவ உதயம் புதுயுகப் பிரவேசம்
உறுதியாய் வளர்த்திடும் ஊக்கமும் படைத்திடும்
கூறுதி எங்கும் ஒலிக்கட்டும் நவோதயா நவோதயா

நாளை நமது உலகம் பாடும் நம் நாடே — ஆங்கே
காளையராய் கன்னியராய் கலை பயில்வோம் களித்திருப்போம்
சின்ன மனங்களில் சீலமதை விதைத்துச் சிருஷ்டிப்போம்
சிற்றுலகை வெல்வோம் சிறகடித்துப் பறப்போம்.

ஆசிரியர் க.ஈஸ்வரன்

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இலக்கம்:எஸ்பிடி/எஸ்எஸ்/எம்

2002 மே மாதம் 09 ஆம் திகதி.

அன்புடைய அதிபர் அவர்கட்கு,

**'நவோத்யா' பாடசாலைகள் அபிவிருத்தி**

இந்நாட்டின் பிள்ளைச்செல்வங்களின் கல்வி தொடர்பில் என்றும் கரிசனையுடன் செயலாற்றும் ஒருவர் என்ற வகையிலேயே இன்று நான் உங்களுடன் அளவளாவுகிறேன்.

கல்விசார் வசதிவாய்ப்புகளின் அடிப்படையில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பாடசாலைகளிடையே நிலவிய பாரிய இடைவெளியைக் குறைப்பதற்காகவே, நீங்கள் தலைமைத்துவம் வழங்கும் 'நவோத்யா' பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு கல்வியில் 'சமத்துவம்' பேணப்படுவதற்கான எமது அரசாங்கத்தின் கல்விச் சிந்தனையாக அமைந்தது யாதெனில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் 2-5 என்ற எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளைத் தெரிவுசெய்து அபிவிருத்தி செய்வதாகும். இந்த சிறப்பான பணியை நிறைவேற்றி வைப்பதற்கு 'நவோத்யா' பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாம் பெரும் பிரயத்தனமொன்றை மேற்கொண்டோம்.

எமது அந்தக் குறிக்கோள் வெற்றியெய்தியுள்ளதாக எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. இதன்பொருட்டு, பாரிய மக்கள் பணியொன்றை நிறைவேற்றுவதற்கு உங்களுடன் இணைந்து உங்கள் ஆசிரியர் குழாம் சிரமேற்கொள்ளும் பாராட்டுதற்குரிய முயற்சியை பெரிதும் போற்றுகின்றேன் என்பதை இத்தால் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா
சனாதிபதி

# தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரின்
# வாழ்த்துரை

தென்மராட்சியின முதன்மைப் பள்ளிகளில் ஒன்றான வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தினரின் "வீரசிங்கன்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பள்ளியின் உயர்தர வகுப்பு மாணவமன்றத்தினரால் "வீரசிங்கன்" மலர் பல வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகளின் காரணமாக இம்மலர் தொடர்ச்சியாக வெளியிடப்படவில்லை. மீண்டும் இவ்வாண்டில் இப்பள்ளியின் உயர்தர மாணவர்களின் அயராத முயற்சியால் "வீரசிங்கன்" மலர்வது எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

மலர் வெளியீடானது பள்ளி மாணவர்களிடையே ஆக்க இலக்கிய எழுத்தாற்றலை வளர்க்கவல்ல சாதனமாகும். மாணவர்களது சித்திர, சிற்பத்திறன் விருத்திக்கும் மலர் வெளியீடு உதவுகின்றது. இத்தகைய திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் வீரசிங்கம் மகா வித்தியாலய உயர்தர மாணவ மன்றத்தினரால் வெளியிடப்படும் "வீரசிங்கன்" மலர் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

வ.செல்வராசா
வலயக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

# தென்மராட்சி கோட்டக்கல்வி அலுவலரின் ஆசிச் செய்தி

அமரர் வீரசிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களால் வெளியிடப்படும் "வீரசிங்கன்" மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தென்மராட்சி பிரதேசத்தில் மீசாலையில் அமைந்துள்ள இப்பாடசாலை உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளில் கல்வியிலும், இணைபாட விதான செயற்பாடுகளிலும் வளர்ந்து வருகின்ற ஒரு பாடசாலையாகும்.

அண்மைக்காலமாக மாணவர் தொகையிலும், பரீட்சைப் பெறுபேறுகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. அதிபர், ஆசிரியர்களினது அர்ப்பணிப்பும் பாடசாலை வளர்ச்சியில் அவர்களது கூட்டுச்செயற்பாடும் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

"வீரசிங்கன்" மலர் சிறப்பாக வெளிவர எனது ஆசிகள் கூறும் அதேவேளை இம்மலரை வெளியிடுவதில் அயராது உழைக்கும் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், கல்லூரிச் சமூகம் ஆகியோர்களிற்கும் எனது பாராட்டுக்கள்.

திரு.நா.சத்தியநாதன்

கோட்டக்கல்வி அலுவலர்

# வித்தியாலய முதல்வரின் ஆசிச்செய்தி

"கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

உலக மாந்தரின் கண்ணாக விளங்கும் கல்விப்பயிரை வளர்த்து வளம் பெருக்கல் தர்மங்கள் அனைத்திலுள்ளும் சிறந்தது என்பர். தம் பெயர் விளங்க எத்தனையோ சாதனைகள் புரிந்த போதிலும் கல்விச்சாலை ஒன்று அமைத்து கல்லார் இல்லா உலகத்தைப் படைக்க முயல்தல் ஆயிரம் கோடி புண்ணியம் நிறைந்தது என்று பாரதியார் முழங்கியதற்கிணங்க இவ்வித்தியாலயத்திற்கு வித்திட்ட "வீரசிங்கன;" என்ற பெயரில் இந்தச்சஞ்சிகை வெளிவருவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர்தர மாணவர் மன்றத்தினர் இவ்வரிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள் அவர்களது முயற்சி சிறந்த கல்விப்பணியாக அமைய வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன். 2006 இல் இவ்வித்தியாலயம் தனது 80 ஆவது ஆண்டில் காலடி வைக்கவிருக்கின்ற. அந்நினைவை பதிந்து வைக்கும் வகையில் "வீரசிங்கன்" சிறப்பாக வெளிவரவுள்ளான் அதற்கு அனுசரனையாகவே இந்தாண்டு இச்சஞ்சிகை வடிவமைக்கப்படுகின்றது. ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பல்வேறு ஆக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

எமது வித்தியாலய வளர்ச்சியில் தற்காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமாக மிளிர்கின்றது. கல்வித்துறை மேம்பாட்டை கருத்தில் கொண்ட இலங்கை அரசு "நவோதய" (புதிய உதயம்) திட்டத்தின் கீழ் சில பாடசாலைகளைத் தேர்ந்து அவற்றிற்கு சகல வளங்களையும் நல்கி வளம் படுத்தி வருகின்றது. அத்திட்டத்தில் தென்மராட்சியில் எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டமை குறித்துப் பெரு மகிழ்ச்சியடைந்திருந்த, அதே வேளை ஆங்கிலத் துறையின் விருத்திக்கெனத் தனியான அலகு ஒன்றை ஆரம்பித்து "வெளிச்ச வீட்டுப் பாடசாலை" (The Light House School) திட்டத்தின் கீழ் எமது வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டமை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகும். புதிய உதயமும், வெளிச்ச வீடும் பரிணமித்த வேளையில் "வீரசிங்கன்" வெளிவருவது காலத்தின் தேவையாகின்றது என்பேன்.

பாடசாலையில் மாணவர்கள் கற்று வெளியேறிப் பட்டம் பெற்றுத் தொழிலில் அமர்தல் மட்டும் நோக்கமாகக் கொண்டிருத்தல் போதுமானதல்ல தாம் கற்ற விடயங்களால் தனித்துவமான ஆளுமையையும், வெளியீட்டையும் காட்டி நிற்பது இத்தகைய சஞ்சிகைகள் என்றால் அதில் தவறிருக்காது அத்தகையவொரு நோக்கத்தை நிறைவேற்றத் தவழ்ந்து வரும் இச்சஞ்சிகை சிறப்புறவும் இதன் தொடர்ச்சியாக அமுத விழா மலர் பலவகையிலும் காத்திரமானதாக வெளிவர வேண்டும் என்ற வகையில் மாணவர்களிற்கும் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களிற்கும் வேம்படி விநாயகனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

கு.சிவானந்தம்
(அதிபர்)

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

பல வருட இடைவெளிக்குப்பின் எமது வித்தியாலய வீரசிங்கன் சஞ்சிகை மீண்டும் இவ்வருடம் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தூயசிந்தனையும் அதன் வழி அமைந்த செயலூக்கமும் ஒருங்கிணையப் பெற்றவரான அமரர் வீரசிங்கமே இவ்வித்தியாலயத்தை படைத்தவர் ஆவார்.

அவருடைய காலப்பகுதியில் இப்பகுதியில் உள்ளவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாய் இருந்தார்கள். தம் இளமைப்பருவத்தில் இருந்தே இப்பகுதியில் உள்ளவர்களை கல்வி அறிவு உள்ளவர்களாக்க முயன்றார். அக்காலத்தில் அமெரிக்கா மிஸனரிமார் அரசின் உதவியோடு கிராமங்களில் பாடசாலைகளை உருவாக்கி கல்வி கற்பித்து வந்தார்கள். அவ்வேளையில் தான் வீரசிங்கனார் தன்னுடைய காணியில் பாடசாலை வைத்து நடத்துவதற்கு நன்கொடையாக அன்பளிப்புச்செய்தார். அவர் ஞாபகார்த்மாக அவரது பெயரைத்தாங்கிய சஞ்சிகை ஒன்று பலவருட கால இடைவெளிக்கு பின் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும். தென்மராட்சி மக்களின் ஒளிவிளக்காக விளங்கும் இவ்வித்தியாலயத்தை ஸ்தாபித்த வீரசிங்கனார் தூரநோக்கும் சிந்தனையில் நல்லதோர் கைங்கரியத்தை செய்ததற்கு நாம் எல்லோரும் நன்றிகடன் உடையவராக இருக்க வேண்டும். எத்தனையோ ஏழைக்குடும்பங்களின் உயர் வாழ்விற்கு இந்த நிறுவனத்தின் மூலம் விடிவு காணமுடியும் என்று அந்தப்பெருந்தகை அன்று சிந்திக்காது போனால் இந்தமாதிரி ஒரு நிறுவனத்தை இன்று கண்டிருக்க முடியாது.

அப்படிப்பட்ட அவருக்கு அவர் பெயரில் சஞ்சிகை வெளியிடுவது சாலப்பொருந்தும். எந்தவொரு கல்வி நிறுவனமும் அதன் கடந்தகால செயற்பாடுகள் விளைவுகள் பயன்கள் என்பவற்றை அது காலங்காலமாக வெளியிட்டுவரும் வித்தியாலய சஞ்சிகைகள், பிரசுரங்கள் மூலம் ஆவணப் பதிவேடாக்கி கொள்கின்றது. இவ் ஆவணங்களில் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு அக்கல்வி நிறுவனம் நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் மேலும் வளர்ச்சி கொள்ளத் தூண்டல்கள் தாமாகவே உருவாகின்றன.

எனவே வீரசிங்கன் இதழ் வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் ஆற்றல்களையும், சிறப்புக்களையும் புலப்படுத்தும் வரலாற்று ஆவணமாகத் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.சிவகுரு
(பிரதி அதிபர்)

## கனிஷ்ட அதிபரின் ஆசிச் செய்தி

எமது பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களை ஒன்றிணைத்துப் பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலில் பல செயற்றிட்டங்களை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது இத்துடன் நின்றுவிடாது மாணவர்களது சுய ஆற்றலை விருத்தி செய்யும் வகையில் எமது பாடசாலை ஸ்தாபகரது பெயரைத் தாங்கிய 'வீரசிங்கன்" தசம ஆண்டுகளின் பின் திரித இதழாக மலருவதில் பெருமையடைகின்றேன். இவ்விதழினைக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் ஆசிரியர்களின் பல ஆக்கங்கள் அலங்கரிக்கின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களின் திறமைகளை எழுத்துலகில் வெளிக்கொணருவதற்கு இவ்விதழ் சிறந்த ஊடகமக திகழ்கின்றது என்றால் மிகையாகாது.

இவ்வரிய பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட உயர்தரமன்ற மாணவர்களையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு இவ்விதழைப் போன்று எதிர்காலத்திலும் இதழ்கள் சிறப்பாக வெளிவரவும் உயர்தர மன்றத்தின் செயற்பாடுகள் வளரவும் வாழ்த்துகின்றேன்

திருமதி.பு.நாகேந்திரராசா
(கனிஸ்ட அதிபர்)

சிரிக்கும் இதழ்கள் அன்பால் சிரிக்கட்டும்
சிந்திக்கும் இதயம் அன்பைச் சிந்திக்கட்டும்
பிறக்கும் மொழியில் அன்பு மழை பொழியட்டும்
திறக்கும் விழிகள் அன்பால் திறக்கட்டும் - (யாரோ)

அன்புதான் பிரபஞ்சத்தின் பிரணவ வேதம்
அன்புதான் மானிடத்தின் மங்கல நாதம்
அன்புதான் ஆன்மாவின் ஆனந்த ராகம்
அன்புதான் உள்ளங்களின் அந்தரங்க வீதம் - (உதயணன்)

பூமியிலே கண்டம் ஐந்து, மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பாளி மார்க்கம்
சாமியென ஜேசு பதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் ஹிந்து மதம், இஸ்லாம் யூதம்
நாம முயர் சீனத்துத் "தாவு" மார்க்கம்
நல்ல "கான்பூசி" மதம் முதலாம் பார் மேல்
யாமறிந்த மதங்கள் பலவுளவாம் அன்றே
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.

— (பாரதியார்)

# பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எமது வித்தியாலயத்தின் ஸ்தாபகர் பெரியார் வீரசிங்கனார் நினைவாக வெளிவரும் சஞ்சிகை சிறக்க எல்லாம் வல்ல வேம்படி விநாயகன் அருளைப் பிரார்த்தித்து,

இச் சஞ்சிகையானது உயர்தர மாணவர் மன்றத்தின் மாணவர்கள், ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியின் பேறாக வெளிவருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இவ்வித்தியாலயத்தில் பாடரீதியாக பல்வேறு மன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மன்றங்களும் தந்தமக்குரிய காலப்பகுதியில் இத்தகைய அரிய செயல்களில் ஈடுபட்டு வருமாயின் அது மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துவிடும். அந்த வகையில் உயர்தர மாணவர் மன்றத்தின் தீர்க்க தரிசனத்தையும் ஏனைய மன்றங்களுக்கு முன்மாதிரியாக இயங்குகின்ற பான்மையையும் நான் பாராட்டுகின்றேன்.

கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் மற்றும் பல விடயங்களைத் தாங்கி வரும் இம்மலரானது எதிர் காலத்தில் காலத்தையும் வென்று சிறப்பாக வெளிவரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வ.சந்திரதேவன்<br>
(பகுதித் தலைவர்)

# ஓர் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

1926ம் ஆண்டு எமது வளம் மிகு மீசாலைக் கிராமத்தில் திரு.அமரர்.வே.வீரசிங்கப் பெரியாரின் செல்வனாக உதித்த "வீரசிங்கன்" என்னும் பள்ளி இன்று 76,77 ஆண்டுகளைத் தாண்டி அடுத்தடுத்த ஆண்டுகளில் அமுதவிழா காணும் வயதை எட்டி உள்ளது என்பதனை எண்ணும் போது களிப்பின்றி இருக்க முடியாது. இப்பாடசாலையின் பெயரில் காலத்துக்குக் காலம் இடைவெளிகளில் "வீரசிங்கன் - 3 வது" மலராக இன்று வெளிவருவதில் பெருமகிழ்வடைகின்றோம். கால ஓட்டத்தில் தன் வளர்ச்சியை இப்பாடசாலை தனக்கு வேண்டிய மனித வளம் பௌதீக வளங்களையும் பெற்று அழகுடனும் கல்வியில் உயர்வுடனும் விளங்குவது அதன் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையின் இம் மலருக்கு ஆசிச் செய்தி கூறுவதில் நான் ஒரு மாணவனாக இருந்து வந்த ஆசிரியர் என்ற வகையில் அக மகிழ்கின்றேன் அதே வேளை மாணவனாக இருந்த போது பிரதான மண்டபத்தையும் மற்றைய வகுப்பறைக் கொட்டில்களையும் கைவேலைகளாகிய பன்ன, வேலை அறை, நெசவறை, சங்கீதக் கொட்டில்களைக் கூட்டித் துப்பரவு செய்ததும் சிறுவிளையாட்டு இடத்தில் விளையாடிக் களித்ததும் மறக்க முடியாதவை. மேலும் எமக்கு அருள் பாலிக்கும் வேம்படி விநாயகரின் முன்னைய மண்மீது அமைக்கப்பட்ட மேடைய்யை சாணி கொண்டு மெழுகி வணங்கியதும் 70ம் ஆண்டில் அதன் கும்பாபிஷேகம் கண்ணுற்றதும் எம் உள்ளத்தை விட்டு அகலாது. இன்றையதனையும் விட எமது பாடசாலையும் அதன் பணிகளும் மேலும் வளர்ந்து சிறப்புற வேம்படி விநாயகர் அருள்வேண்டி "வீரசிங்கன் மலர் சிறக்க ஆசி கூறுகின்றேன்" உவகை அடைகின்றேன்.

மாணவ ஆசிரியர்,
ச.சின்னத்தம்பி.
(பொறுப்பாசிரியர் வழிகாட்டலும் ஆலோசனையும்)

# மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து

கல்விச்சாலைகளின் கல்வித்திட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாவன மாணவ மன்றங்களாகும். ஆசிரியர்கள் கொடுத்தவை யாவும் வெறும் எழுத்தறிவோடு நின்று விடுவதில் அர்த்தமில்லை என்பதைப்புரிந்து கொண்டு இத்தகைய மாணவமன்றங்கள் அமைக்கப்பட்டன. அதற்குப் பிறிதொரு காரணம் "மாணவனுக்காகவே கல்வி" என்ற கோட்பாடு என்றால் மிகையாகாது. இந்தவகையில் யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய உயர்தர மாணவ மன்றமானது மாணவர்களாலேயே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு தாமே ஒழுங்கு செய்து அறிவு ஆர்வத்தை மன்றத்தில் வெளிப்படுத்தி தமது அறிவை வளர்க்க முயன்று வந்தனர், வருகின்றனர். அத்தகைய முயற்சியின் விளைவே நீங்கள் கைகளில் தாங்கியிருக்கும் "வீரசிங்கன்" சஞ்சிகையாகும்

சஞ்சிகை மிகவும் சிறியதாகவும் எளிமையாகவும் வெளிவருகின்றது. இது 2006இல் அமுதவிழாவை எதிர்பார்த்திருக்கும் எமது வித்தியாலயத்தின் அமுதவிழா மலருக்கான அனுசரணை மலராகும். இச்சஞ்சிகை குறுகிய அளவில் இளஞ்சந்ததியினரால் வெளிப்படுத்தப்படுனவதால் இதில் வரும் குற்றங்களையும் குறைகளையும் சுட்டிக்காட்டி அமுத விழா மலர் சிறப்புற அமைய ஆலோசனைகளை நல்குமாறு பெருமனம் கொண்ட வித்தியாலய சமூகத்திடம் கரம் கூப்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இச்சஞ்சிகை வெளியாவது பற்றிய விடயம் அனைத்தும் மாணவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் மூலம் செய்தியறிந்து ஆசிரியப்பெருந்தகையினர் பலரும் தமது ஆக்கம் இடம் பெறவில்லையே என மிகவும் ஆதங்கப்பட்டார்கள் அவர்களிடம் இப்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். அடுத்துவரும் மலருக்கான ஆக்கங்களை ஆக்கபூர்வமாகத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்.

இச்சஞ்சிகை பற்றி அதிபரிடம் ஆலோசனை கேட்ட போது தட்டிக் கொடுத்து ஊக்கமளித்து பாடசாலை வளங்களைப் பயன் செய்யவும் அனுமதித்த பெருமனதுக்கு நன்றி செலுத்துகின்றேன். இன்னும் ஆசிச்செய்திகள் வாழ்த்துரைகள் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள். கட்டுரைகள், கவிதைகள், மற்றும் ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இச்சஞ்சிகை கணனி வடிவமைத்த அன்பர்கள் திரு.சு.துசித்குமார், திரு.பூ.கோபிகிருஸ்ணா, திரு.க.சிவசுதன் ஆகியோருக்கும் பிரதிகளை திருத்தம் செய்து உதவிய திருமதி.ம.மகேசன் ஆசிரியைக்கும், அச்சு வடிவமைத்த திரு.த.கணபதிப்பிள்ளை அவர்களிற்கும் நூல் வடிவமைத்த திருக்கணித அச்சக நிலையத்தார்க்கும் மற்றும், மாணவ மன்றத்தினருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். அமுத விழா சிறப்புற வேம்படி விநாயகரது அருளை வேண்டி பிரார்த்தித்து விடை கொள்கின்றேன்.

க.ஈஸ்வரன் (மன்றப் பொறுப்பாசிரியர்)

# தத்துவ முத்துக்கள்

- நன்னயப் பாங்கு அடங்கியிருப்பது சாப்பாட்டு மேசையிலுள்ள பச்சடியைத் தட்டி விடாமலிருப்பதிலல்ல, யாராவது தட்டி விடும் பொழுது அதைக்கண்டு கொள்ளாமல் இருப்பதில் தான் அடங்கியுள்ளது.

- அன்டன் செகாவ்

- மழை இல்லாத நேரத்தில் கையில் குடை வைத்திருப்பவனைக் கண்டு பைத்தியக்காரன் என்று கேலி செய்யும் இந்த உலகம். ஆனால் திடீர் மழையொன்று வந்து விட்டால் அவனைத் தீர்க்கதரிசி என்று இதே உலகம் கொண்டாடும்.

- கோப்பாய் சிவம்

- மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்குத் தக்கபடி அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும் .

- சுவாமி விவேகானந்தர்

- முதலில் ஒருவர் தம்மை நல்வழியில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். பிறகுதான் மற்றையவர்க்கு எடுத்துரைக்க வேண்டும். இத்தகையவர் பழித்துக் கூறாமாட்டார்.

- தம்மபதம்

- இந்துக்களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியருடைய தெய்வம் மக்கத்திலும் இருக்க, அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத்திலும் இருக்கிறான்.

- கபீர் தாஸர்

- கருணையே பஞ்சாகவும், போதுமென்ற மனப்பான்மையே நூலாகவும், புலனடக்கமே முடிச்சாகவும், உண்மையே சரடாகவும், கொண்டு அமைந்த பூணூலே எனக்கு வேண்டும்.

- குருநானக்

## உயர்தர மாணவ மன்றத் தலைவனின் உள்ளத்திலிருந்து

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 80 ஆண்டுகளை 2006ல் நிறைவு செய்யும் வேளை அதற்கு அனுசரணையான "வீரசிங்கன்" மூலம் உங்களைச் சந்திப்பதையிட்டு பெருமகிழ்வு அடைவதோடு உயர்தர மாணவமன்றத் தலைவன் என்ற வகையில் இச் சஞ்சிகைக்கு, எனது வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் அகமகிழ்வு அடைகின்றேன்.

இப்படசாலை ஆரம்பமாகி ஏறத்தாழ 80 ஆண்டு காலத்துள் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் குறிப்பிட்டு கூறும் அளவிற்கு வளர்ந்து வருவது உண்மையில் பாராட்டுதற்குரியதாகும். ஆதிபர் சக ஆசிரியர்களின் முயற்சியுடன் தமிழ் சமய விழாக்கள், நூல் அறிமுக விழாக்கள், கல்விக் கருத்தரங்குகள் பெரியார் நினைவுப் பேருரைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் எமது பாடசாலை பாரிய பங்களிப்பு நல்கி வருகின்றமை நல்லாரோக்கிய அறிகுறியாகும்.

இனி வரும் புதிய சக்கரத்தில் எங்கள் பாடசாலையானது பல சிறப்பம்சங்களுடன் யாழ் மண்ணில் பிரகாசிக்க வேண்டும். இப்பாடசாலையின் அதிபர் அவர்களின் தகுந்த தலைமைத்துவ வழிகாட்டலில் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், கட்டுறு ஆசிரியப் பயிலுனர்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியில் இப்பாடசாலை மேலும் விருத்தியுறவும் இதன் செயற்பாடுகள் அனைவருக்கும் நலன் நல்கவும் நான் உளமாற வாழ்த்துகின்றேன். மேலும் அனைவரது ஒத்துழைப்புடன் யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் யாழ் மண்ணில் சிறந்தோங்கி கல்வி உலகிற்கு சிறந்த பங்காற்ற வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலை எண்பதாண்டுகளை நிறைவு செய்து அமுத விழா காணும் வகையில் வெளிவரும் இம்மலருக்கு பல்வேறு ஆக்கங்களை அளித்து அலங்கரித்துள்ள அனைவருக்கும் எனது பாராட்டுதல்களும் நன்றிகளும். இம் மலர் வெளியீட்டிற்கு பல்வேறு விதத்திலும் முன்னின்று இயங்கிய மாணவர்கள்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள். மேலும் இம்மலர் சிறப்புற அமைவதற்கு ஏதுவாக இருந்த அனைவரைம் நான் பாராட்டுகின்றேன்.

வ.ஆகிலன்
(உயர்தர மாணவர் மன்றத் தலைவன்)

## பத்திராதிபரின் பேனாவிலிருந்து..........

"அரிய என்று ஆகாத இல்லை" என்ற மகுட வாசகத்துடன் திகழும் எமது வித்தியாலயத்தின் உயர்தர மன்றமானது கலை. வர்த்தகத்துறை மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது. எனினும் எமது மன்றம் வேம்படி விநாயகனின் அருளினால் சிறப்புற்று விளங்குகின்றது. "வீரசிங்கன்" இவ்வித்தியாலயத்தின் அனைத்து மாணவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதால் அனைத்து மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி மிகக்குறுகிய காலத்தில் இச்சஞ்சிகை வெளிவருகின்றது.

மேலும் இச்சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் தந்து சிறப்பித்த பெரியோர்களிற்கும் மற்றும் எல்லா விதத்திலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எமது செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுவதோடு, மன்றம் சிறப்புறவும், "வீரசிங்கன்" தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

இ.மதீஸ்வரன்
(பத்திராதிபர்)

இச்சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாவர்.

# செயற்பாடுகள் பற்றிச் செயலர்

இம் மலரானது நம் எல்லோரினதும் கூட்டு முயற்சியின் அறுவடையே ஆகும். நீண்ட கால இடைவெளியின் பின் இம்மலரானது வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயம் மட்டுமன்றி பெருமைக்குரிய விடயமுமாகும்.

இம் மலரானது உயர்தர மாணவ மன்றத்தால் பொறுப்பேற்று வெளிவிடப்படுவதால் இம்மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் மன்ற செயற்பாடுகள் தொடர்பான சில தகவல்களை வழங்குகின்றேன். இவ் உயர்தர மாணவமன்றமானது மாணவன் வ.அகிலன் தலைமையில் பொறுப்பாசிரியர் திரு.க.ஈஸ்வரன் ஆசிரியர் வழிகாட்டலில் பல நிகழ்வுகளை தாங்கியவாறு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

குறிப்பாக 2004 ஆம் ஆண்டில் பாரிய சில நிகழ்வுகளை மன்றமே பொறுப்பேற்று அனைத்து மாணவர்களினதும் உதவியுடன் பல செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றியுள்ளது. அந்த வகையில் இவ் உயர்தர மன்றமானது பல அறிவுசார் நிகழ்வுகளை நடத்தி மாணவர்களின் அறிவு விருத்திக்கு பெரும் பங்காற்றி வருகின்றது.

இம் மன்றத்தின் சிறப்பு என்னவென்றால் அனைத்து உயர்தர மாணவர்களும் இம்மன்றத்தில் நிகழ்வுகளை வழங்குவதாகும். எவ்வாறெனில் ஒவ்வொரு மன்றத்திற்கும் வகுப்புகளின் தினவரவு இடாப்பில் உள்ள பெயர் ஒழுங்குப்படி மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இம்மன்றத்தில் "பேச்சு, கவிதை, பட்டிமன்றம், நாடகம், நகைச்சுவை, வினாவிடைகள், புதிர்ப்போட்டிகள்;" போன்ற பல நிகழ்வுகள் நிகழ்த்தப்படும்.

அதே போன்று குறிப்பிட்ட ஆண்டிற்கான ஆசிரியர் தின விழாவானது ஏனைய ஆண்டுகளை விட இவ்வாண்டு வித்தியாசமான முறையில் சிறப்பாக மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு அனைத்து மாணவர்களினதும் உதவியுடன் நடத்தப்பட்டது. அனைத்து ஆசிரியர்களிற்கும் மாணவர்கள் ஒரே விதமான பரிசில்களை கொடுத்தும் மாலைகளை அணிவித்தும் மலர்கள் தூவியும் கௌரவித்தார்கள். இவ்விடத்தில் நான் மாணவர்களைக் கேட்டுக் கொள்வதென்றால் எதிர்வரும் ஆண்டுகளிலும் இம் முறையை சிறப்பாகக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும்.

தொடர்ந்து இம்மன்றமானது பொறுப்பேற்று நடத்துகின்ற இந்நூல் வெளியீடானது முற்றுப் பெற்று இன்று நூலாக "வீரசிங்கன்" என்ற தலைப்பில் வெளியாகின்றது. இவ்வெளியீடானது எமது பாடசாலை ஸ்தாபகர் பெயரைப் புலப்படுத்துவது சிறப்பாகும்.

இந்நூல் வெளியீடானது இவ்வளவு சிறப்பாக வெளிவர மிகவும் முன்னின்று உழைத்தவர் எமது உயர்தர மாணவ மன்ற பொறுப்பாசிரியர் திரு.க.ஈஸ்வரன் ஆசிரியர் ஆவர். தொடர்ந்து இந்நூல் சிறப்பாக வெளிவர பல வழிகளிலும் அனுமதித்து ஆலோசனை வழங்கிய அதிபர் திரு.கு.சிவானந்தம், பிரதி அதிபர் ஆகியோருக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்நூல் தொடர்பாக எமக்கு உதவ எம்முடன் சேர்ந்து உழைத்த கீழ்வரும் யாவருக்கும் எமது உயர்தர மன்றம் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

1. ஆசிரியர்கள்
2. மன்ற உறுப்பினர்கள்.
3. கனிஸ்ட அதிபர், பகுதித்தலைவர்கள்
4. ஆக்கம் தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள்.
5. தரவுகள் தந்துதவிய ஆசிரியர்கள்.
6. கணனி ஆசிரியர் திரு. சு.துசித்குமார்.
7. எழுத்துக்களை கணனி வடிவமைத்த ஆசிரியர் திரு.ப.சிவசுதன், பூ.கோபிகிருஸ்ணா
8. பிரதிகளை திருத்தம் செய்து உதவிய திருமதி ம.மகேசன்
9. அச்சு வடிவமைத்த திரு த.கணபதிப்பிள்ளை

யாவருக்கும் ~~எமது உளம் கனிந்த~~ நன்றிகள் பல.

ஜெ.கஜன்
(உயர்தர மன்ற செயலாளர்)

# பொருளாளரின் எண்ணத்தில்

யா/வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் வீரசிங்கன் சஞ்சிகையானது நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு உயர்தர மாணவர்மன்றத்தின் அனுசரணையுடன் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது அந்த வகையில் பொருளாளர் என்ற வகையில் மன்றத்தின் பொருளாதார செயற்பாடுகள் சம்பந்தமாக கருத்துக்களை தெரிவிக்கவேண்டிய கடைப்பாடு உள்ளது.

எமது மன்றத்தின் பொருளாதார நடவடிக்கை மூலம் பல செயற்பாடுகளை மிகவும் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறோம். அங்கத்துவ சந்தா மூலம் திரட்டப்பட்ட சிறுதொகையைக் கொண்டே வெற்றிகரமான செயற்பாடுகளை செய்து வந்திருக்கிறோம். பாடசாலை ஆசிரியர் தினம், பாடசாலை சூழலுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் போன்றவற்றையும் எம்மன்றம் பொறுப்பேற்று செயற்படுத்தி வந்திருக்கிறது அவற்றுள் இந்நூல் வெளியீடும் ஒரு வெளிக்காட்டலாகும். எனவே எமது மன்றம் சிறப்படைய அனைத்து மாணவ உள்ளங்களும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் இந்நூல் வெளியீடு சிறப்பாக அமைய எனது பூரண ஒத்துழைப்பையும் வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

க.மயூரன்
(பொருளாளர்)

# பொருளடக்கம்


| | பக்க இல |
|---|---|
| 1. வித்தியாலய முதல்வரின் ஆசிச்செய்தி | I |
| 2. பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி | II |
| 3. கனிஷ்ட அதிபரின் வாழ்த்துச் செய்தி | III |
| 4. பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி | IV |
| 5. ஒரு ஆசிரியரின் உள்ளத்திலிருந்து | V |
| 6. மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து | VI |
| 7. உயர்தர மாணவர் மன்றத் தலைவனின் உள்ளத்திலிருந்து | VII |
| 8. செயற்பாடுகள் பற்றிச் செயலர் | VIII |
| 9. பொருளாளரின் எண்ணத்தில் | IX |
| 10. பொருளடக்கம் | X |
| 11. மரணத்தை வெல்வோம் | 1 - 2 |
| 12. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் | 3 - 4 |
| 13. யாழ்ப்பாண கல்வித்தர வீழ்ச்சிக்கு காரணமாகும் காரியங்கள் | 5 - 7 |
| 14. கணிதத்திந் நிறைவைக் கண்ட மாமேதை | 8 |
| 15. தடம் மாறிச் செல்லும் யௌவனம் | 9 - 11 |
| 16. மனிதனைப் பக்குவப்படுத்தும் சமயம் | 12 - 14 |
| 17. கல்வி சார் ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும் | 15 - 17 |
| 18. புனைகதை இலக்கியம் | 18 - 23 |
| 19. பச்சை வீட்டு விளைவுகளும் பூகோள வெப்பமாதலும் | 24 - 25 |
| 20. அவன் ஒரு மெழுகுவர்த்தி ஆகின்றான் - சிறு கதை | 26 - 29 |
| 21. கவிதைகள் | 30 - 40 |
| 22. பொது அறிவு | 41 |
| 23. அறிவுத் துளிகள் | 42 |

## உயர்தர மாணவ மன்ற செயற்குழு 2004 – 2005

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | :- | திரு.க.ஈஸ்வரன் |
| தலைவர் | :- | வ.அகிலன் |
| செயலாளர் | :- | ஜெ.கஜன் |
| பொருளாளர் | :- | க.மயூரன் |
| உபதலைவர் | :- | பொ.தனேசன் |
| உபசெயலாளர் | :- | பு.நவஜீதா |
| பத்திராதிபர் | :- | இ.மதீஸ்வரன். |

| | | |
|---|---|---|
| வகுப்பு பிரதிநிதிகள் | :- | 12A - சி.சிவகரன் |
| | | 12B - மேரி ஜெனிற்றா |
| | | 12C - ர.சசிகரன் |
| | | 13A - யோ.நேசவன் |
| | | 13B - க.சுதாஸ்கரன் |
| | | 13C - மோ.பிரகாஷ் |

# இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்

இன்றைய இளைய சமதாயமே நாளைய உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் பிரமாக்கள். நவீன விஞ்ஞான யுகத்தில் வேகமாக நாகரிக மாற்றம், கலாசார புரட்சி என்பவை காரணமாக இன்றைய இளைய சமுதாயத்தினர் மாபெரும் சவால்களை எதிர் நோக்கி உள்ளனர்.

"வாழ்க்கைப் போருக்கு இசைவாக்கம் அடையக்கூடிய உயிரினங்களே தப்பிப் பிழைக்கக் கூடியன" என்ற கூற்று தத்துவத்தின் அடிப்படையில் எதிர் கால யுகத்தை எதிர் கொள்ளக் கூடிய வகையில் உடல் ரீதியில் மட்டுமல்ல உள ரீதியிலும் பரிணாம வளர்ச்சியடைந்த மனிதனே உலகில் வாழ அருகதை உள்ளவனாவான் ஆகவே உலகியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் பலம் பொருந்திய சமூதாயத்தை கட்டியெழுப்புவது இன்றைய தலைதுறையினரின் கடமையாகும்.

இளைய சமுதாயத்தினரிடையே உளவியல் ரீதியில் மறுமலர்ச்சி காண கல்வி இன்றியமையாதது "இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து" "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற வாக்குகளுக்கு அமைய ஒரு குழந்தைக்கு ஐந்து வயதில் இருந்தே கல்வியூட்ட ஆரம்பித்தால் மட்டுமே உரிய பலனைப் பெற முடியும்.

கல்வியானது உளவியல் பாங்கு சமூக சிந்தனை என்பனவற்றுடன் இரண்டறக் கலந்து அளிக்கப்படுகையிலேயே முழுமை பெறுகின்றது. அவ்வாறில்லாமல் வெறும் மனனஞ் செய்வதை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட கல்வி "ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பது போல் பயனற்றதாகி விடுகின்றது.

சீர்கேடான சினிமாக்களின் ஊடுருவல், தரமற்ற வியாபார நோக்கமான பத்திரிகைகளின் அறிமுகம், மதுப் பழக்கம், புகைப் பழக்கம் என்பன இளைஞர் சமுதாயத்தை சீரழிந்து குட்டிச் சுவராக்கக் கூடியன.

இளைஞர் சமுதாயத்தை பொறுத்த வரை ஒவ்வொரு கணமும் பொன்னாக பேணிக் காக்கப்பட வேண்டும். இறந்த மனிதன் மீண்டும் வராததைப் போன்று இறந்த காலமும் ஒரு போதும் வரப்போவதில்லை காலத்தே பயிர் செய்வதன் தோற்றதாக சரித்திரம் இல்லை ஆகவே கரைந்து போகும் ஒவ்வொரு நிமிடமும் ஓர் இளைஞனை பொறுத்த வரை முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகளாக அமைய வேண்டும்.

தமக்கு முன்னே வாழ்ந்து மறைந்த தம் இலட்சியங்களையும் சிந்தனைகளையும் ஒன்றிணைத்து காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய பதிந்து முன்னெடுத்து செல்லுதலே இளைய தலை முறையினருக்கு வேண்டப்படும் பண்பாகும்.

எனவே "பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவல;" என்ற சங்கச் சான்றோர் வாக்குக்கு அமைய வித்து முளை கொண்டு செடியாகி அது பருவமெய்தி பூத்து காய்த்து கனிந்து மீண்டும் வித்தினை தந்து அதன் பரம்பரையின் பரிணாமச் சங்கிலியின் தொடர்பினை சந்து மறைந்து விடுவதை போல் மானிட வாழ்வும் தோன்றி வளர்ந்து வாழ்ந்து மறைந்து விடும் தன்மையுடையது. இத்தன்மையின் அடிப்படையில் நமது காலகட்டத்துக்கு முன்னே எத்தனையோ தலைவர்கள் அவர் தம் நீதி மொழிகளையும் வாழ்க்கை நெறிகளையும் மட்டும் எமக்கு மீதியாக வைத்து விட்டு மறைந்து விட்டார்கள்.

இவ் யதார்த்த உலகில் மூத்தோர் விட்டுச் சென்ற இடை வெளிகளை நிரப்பி அவர்கள் செய்த பணிகளை தோள்களில் தாங்கி தாம் வாழும் சமுதாயத்தையும் நாட்டினையும் ஏன் உலக மக்களையும் முன்னெடுத்துச் செல்லும் மக்களையும் உத்தம தலைவர்களாக இன்றைய இளைய சமுதாயம் விளங்க வேண்டும்.

"கற்க கசடற கற்றவை கற்ற பின்
நிற்க அதற்கு தக"

என்ற குறளுக்கமைய கல்வியை நன்கு துறைபோகக் கற்றல் மட்டும் போதாது கற்ற கல்விக்கு பயன் ஏற்பட்க் கூடிய நிலையில் அதற்குத் தக ஒழுகவும் வேண்டும், கல்வி என்ற சுடர் விளக்கின் மூலம் இன்னும் பலரின் வாழ்வில் அறிவு ஒளியேற்ற முடியும்.

இளைய சமுதாயம் கல்வி பெற்று சான்றோராக விளங்குவதுடன் மனித நேயமுள்ளவர்களாக மானிட தாமததையும் ஒவ்வொரு தனி மனிதனது சுதந்திரத்தையும் உரிமைகளையும் மதிப்பவர்களாக விளங்கினால் மட்டுமே நாளைய சமுதாயத்தில் ஒப்பற்ற தலைவர்களாக விளங்க முடியும்.

தந்திரோபாய அரசியலின் கையில் சட்டநிர்வாகமும் ஆளுமைப் பொறுப்பும் சிக்கி சீரழியாமல் விவேகமும் திறமும் உள்ள பகுத்தறிவுள்ளவர்கள் தலைவர்களாக உருவாக வேண்டும் இன,மத,மொழி,ஜாதி பிரதேசம் என்ற வேறுபாடுகள் இன்றி ஒவ்வொருவருடைய இன,மொழி,மத பண்பாடுகள் கலாசாரங்களை மதித்து அவர்களுடைய தனித்துவத்தைப் பேணி அனைவரும் சுதந்திரம்,சமத்துவம்,சகோதரத்துவம் உடைய மானிட சமூகமாக இணைந்து வாழ வழி காட்டும். தன்னலமற்ற உன்னதத் தலைவர்கள் இன்றய இளைய தலைமுறையிலிருந்து தோன்றி நல்லாட்சி செய்யும் நாளே இவ்வுலக மக்களின் வாழ்வில் விடிவெள்ளி தோன்றும் நாள்.

மு.ஜெயந்தினி

தரம் $13^{A}$ கலைப்பிரிவு 2005

# இயற்கையான ஐவகை ஐம்பூதங்களை உணர்த்தும் சொற்கள்

| நிலம் | தீ | வளி | விண் | நீர் |
|---|---|---|---|---|
| மண், புவனம்<br>புவி, வேலி<br>அவனி,<br>பூதலம்<br>ஞாலம்,<br>உலகம்<br>வையகம்,பார்<br>மேதினி, படி | எரி, கனல்<br>நெருப்பு,<br>அழல்<br>கொள்ளி,<br>கதிர்<br>அங்கி | வாடை,<br>காற்று<br>கால்,<br>தென்றல்<br>ஊதை,<br>சூறை<br>உலவை,<br>கொண்டல் | வான்,<br>விசும்பு<br>மீ, கொண்மு<br>எழினி, புகார் | மழை,<br>பெயல்<br>கார், துளி<br>தூவல், சிதர்<br>பிதிர்,<br>துவலை<br>மாரி, ஆலி<br>தூறல்,<br>அறல் |

தகவல் :- கூர்மதி

# யாழ்ப்பாணக் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு காரணமாகும் காரியங்கள்

இன்றைய உலகு விஞ்ஞான உலகு விந்தைகள் செய்து சிந்தைகள் கவரும் விசித்திர உலகு. இங்கே கால கதியின் வேகத்தில் பழையன கழிகின்றன புதியன புகுகின்றன அதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்குநாள் மாற்றம் பெற்றுச் செல்கின்றது. அவ்வாழ்க்கைத்தர மாற்றத்தோடு சேர்ந்து நடைபயில வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் .

தேன் மொழியாம், தென் மொழியாம், அதன் பெயர் தமிழ் மொழியாம் என கவிஞர்களால் போற்றப்பட்ட அமுத மொழியாகும். தமிழ் மொழிக்கு ஆரியச் சக்கரவர்த்தி காலம் தொடக்கம் அவைக்களமாக விளங்குவதும் இலங்கையின் முனைப்பகுதி எனப் போற்றப்படுவதுமான யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று கல்வித் தரம் வீழ்ச்சிகண்டு வருகின்றது. என்று பரவலாக பாடசாலை தொடக்கம் பத்திரிகை வரை பேசப்படுகிறது. பெரும்பாலாக எல்லோரும் மாணவர்கள் மீதே பழியை சுமத்துகிறார்கள். மாணவர்கள் தான் யாழ்ப்பாணக் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு முழுக்க முழுக்க காரணம் என அடித்துக் கூறுகிறார்கள். இதனை அடியோடு ஏற்றுக் கொள்ள முடியாது சில சந்தர்ப்பங்களில் புறநடையாக மாணவர்கள் ஒரு சிலரது பிறம்பான நடத்தைகள் கல்வித்தரம் விழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்தமாக மாணவர் சமுதாயத்தையும் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக போரின் தாக்கங்களையும், வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தவறான பாதையில் பிரயோகிப்பதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு படிக்கற்களாக இருக்கவேண்டிய சமூகத்தினர் தடைக்கற்களாக இருப்பதுமே காரணங்களாக அமைகின்றன.

ஐம்பத்தாறுகளில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப் படுகொலைகள் தொடக்கம் செம்மணிப் படுகொலைகள் ஈறாக பல படுகொலையின் வடுக்களைத் தாங்கியவர்களாய் இடம் பெயர்வின் மத்தியிலே சிக்குண்டு தமது முத்தான சொத்துக்களை இழந்தவர்களாய் பாசத்துக்குரிய உறவுகளை இழந்தவர்களாய் தமது சொந்த இடத்தில் மீண்டும் குடியேற முடியாதவர்களாய் பாடசாலை வளாகத்தை சுற்றி முட் கம்பி வேலிகளால் சிறைவைக்கப்பட்டவர்களாய் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மாணவர்கள் அடக்கப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழ்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மாணவர்கள் இவற்றை எல்லாம் தாங்கி வடுக்களாக வாங்கி சிலவற்றை இன்னும் சுமந்து நடக்கிறார்கள் இது இப்படி இருக்க கடந்த ஐந்தாறு வருடங்களாக மாணவர் மத்தியில் சில நஞ்சூட்டல் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. ஆபாசத்திரைப்படங்களை மாணவர் மத்தியில் மலிவான விலையில் கிடைக்கச் செய்தல் அவர்களது கல்வியை சீரழிக்கும் வகையில் போதைப் பொருட்கள், மது, சிகரட், போன்றவற்றை மாணவர்களது கைகளிலேயே தானாக வந்து விழச் செய்தல் போன்ற கல்வியை குழப்பும் செயல்கள் மூலம் யாழ்ப்பாணக் கல்விச் சூழ்நிலை திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. ஏன் இவ்வாறு இங்கு குறிப்பிடப்படுகின்றது என்றால் இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழுக்கான தனித்துவமான கலை கலாசார பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அத்தகைய தனித்துவங்கள் மறைந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது.

வாழ்க்கைத் தரத்திலேற்பட்ட முன்னேற்றம் எவ்வாறு தவறான பாதையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை ஆராய்வோம். இன்று நவீன சாதனங்கள் பெருகிக் கொண்டே வருகின்றது தொலைபேசி, வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி, கணனி என்பன அவற்றில் முக்கியமானவை இன்றைய சூழ்நிலையில் எல்லோர் வீடுகளிலும் கணனி இல்லாவிட்டாலும் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி என்பன மலிவாக காணப்படுகின்றது. இச் சாதனங்களில் பெரும்பாலானவை வெளிநாட்டுப் பாகங்களினால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே கொள்வனவு செய்யப்பட்டவையாக காணப்படுகின்றன. இச் சாதனங்கள் ஒரு வகையில் மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. உதாரணமாக தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்துக் கொண்டால் தினமும் அதற்கு ஓய்வே கிடைப்பதில்லை. மேலும் அதற்கு உரமூட்டுவதற்காக ஞரமெ வு.ஏஇ ஞயமவைவ வு.ஏ வந்துள்ளது பல இடங்களில் ஒரு டிஸ் அன்டெனா மூலம் இருபது முப்பது இணைப்புக்களை பெற்று பல குடும்பங்கள் ஞரமெ வு.ஏ பார்க்கிறார்கள். இதனால் இவர்கள்

வீடுகளில் இருபத்துநான்கு மணி நேரத்தில் பன்னிரண்டு மணி நேரமாவது தொலைக்காட்சி ஓடிக் கொண்டே இருக்கும் ஒவ்வொரு நாளும் குறையாமல் இரண்டு படம், பல்வேறு நாடகங்கள் அவை மெட்டி ஒலி, வேலன் என விரிந்து கொண்டே செல்கின்றது. குடும்பத் தலைவர் தொடக்கம் ஒரு வயதுக் குழந்தை வரை எல்லோரும் தொலைக்காட்சி முன்னால் இருப்பர். எனவே மாணவர்கள் வீட்டில் படிப்பதெங்கே, படித்ததை மீட்கத்தான் பொழுது எங்கே எலி பிடிக்கும் பூனைக்கு முன்னால் மீனை வைத்து விட்டு மீனை சாப்பிடாதே! என்றால் அது பார்த்துக் கொண்டிருக்குமா? திருடத்தானே செய்யும் அதே நிலைதான் மாணவர் நிலையும், தீ அளவாக எரிந்தால் விளக்கு அளவு கடந்தால் நெருப்பு இத்தகையதே தொலைக்காட்சியும். தொலைக்காட்சியை அளவோடு பயன் படுத்தினால் நன்றே மாறாக அளவுக்கு மிஞ்சிப் பயன்படுத்தினால் அதுவே மாணவர்களின் கல்வியை சிதைக்கும் காரணமாய் அமைந்து விடும். மேலும் தொலைக்காட்சிப் படங்களை அளவுக்கு மிஞ்சிப் பார்ப்பது அறிவினை மழுங்கடிக்கச் செய்யும் என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை உணர்ந்து மாணவர்களுக்கு வீட்டில் படிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சார்ந்துள்ளது எனக் கூறலாம்.

இன்று பட்டியைத் தொட்டு எங்கும் சினிமாத் தியேட்டர்கள் பெருகிக் காணப்படுகின்றன. இங்கே விதம் விதமான படங்கள் காண்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் இதனால் பாடசாலைக்கு அல்லது தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லாது படக்காட்சிச்சாலைக்கு செல்லும் நிகழ்வும் சில வேளைகளில் நடைபெறுகின்றது. இதனால் மாணவர்களுக்கு படிக்கவேண்டும் என்ற ஓர் எண்ணமே அவர்களது மனதில் இருந்து மறைந்து போகின்றது மேலும் இன்ரநெற் போன்றவற்றின் தாக்கம் வெளிநாடுகளில் சூடு பிடிக்கத் தொடங்கினாலும் அவை யாழ்ப்பாணத்தில் இன்றும் பெரிதாக புழக்கத்துக்கு வரவில்லை அந்த வகையில் இன்ரநெற்றுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

மாணவர்கள் சமூகத்துக்கு படிக்கற்களாக இருக்க வேண்டிய சமூகம் இவ்வாறு தடைக்கற்களாக இருப்பது பற்றி மேலும் ஆராய்வோம். புகைபிடிக்கின்ற பெரியவர்கள் சிலர் சிறுவர்களான மாணவர்களை கொண்டு சிகரெட், பீடி, என கடைகளிலே வாங்கி தாங்கள் நுகர்கிறார்கள். இதனை வளர்ந்து வரும் இளம் சமுதாயம் பார்க்கின்றது. தந்தை மது அருந்தி விட்டு அவர் புரியும் ரகளைகளால் அவன் துன்பப்படுகின்றான். அவனது குடும்பம் துன்பப்படுகின்றது. நாளுக்கு நாள் விரக்தி அதிகரிக்கின்றது. நானும் அவ்வாறு செய்தால் என்ன? என்ற ஒரு எண்ணம் அவனை அறியாமலே அவனது மனதில் வேரூன்றத் தொடங்குகின்றது. பிஞ்சு மனம் ஒன்றிலே நஞ்சு விருட்சம் ஒன்று வேர் விட ஆரம்பிக்கின்றது. பிற்காலத்தில் அவன் அதனையே பழக்கமாக நாளாந்தம் வழக்கமாக செய்யத் தொடங்குகின்றான். இத்தகையோரை நண்பர்களாக கொண்ட மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மெல்ல மெல்ல மாணவர்கள் அழிவுப் பாதையில் தள்ளப்படுகின்றார்கள்.

இன்று ஏதாவது ஒரு கோயிலில் அலங்கார உற்சவம் தொடங்கி விட்டதென்றால் அங்கே பதினைந்து நாளும் ஏதாவது நிகழ்வு இடம் பெறும் அந்த நிகழ்வுகள் மாணவர் சமூகத்திற்கு பிரயோசனமான அறிவை வளர்க்கின்ற சொற்பொழிவுகளாக, பட்டிமன்றங்களாக, கவி அரங்குகளாக நடத்தினால் பலரும் நன்மை பெறுவார்கள். ஆனால் நடப்பதென்ன ஒவ்வொருநாளும் விடிய விடிய காசைக் கரியாக்கி “கோஸ்டி” பிடிக்கப்படுகின்றது. இருபது முப்பது Box களை அடுக்கி வைத்து விட்டு அவர்கள் விடிய விடிய பாடுவார்கள். படிக்கின்ற மாணவர்கள் பாடு அன்று அதோ கதிதான். இந் நிகழ்வினால் மாணவர்கள் இரண்டு வகையில் பாதிக்கப்படுகின்றார்கள். ஒன்று இதைப் பார்க்கின்ற மாணவர்கள் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன மற்றையது (சத்தத்தின் காரணமாக) ஆனால் அவர்கள் இதைப்பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை மாறாக அலங்கார உற்சவங்களில் போட்டி போட்டு கோஸ்டி பிடிக்கின்றனர்.

இன்றைய பொது நூலகங்களை பொதுவாக எடுத்துக் கொண்டால் அங்கே ஏாக்கை பூராகவும் ரமணிச்சந்திரன் தொடக்கம் ராஜேஸ் குமாரின் புத்தகம் ஈறாக எல்லாப் புத்தகங்களும் நூற்றுக் கணக்காக அடுக்கப்பட்டு இருக்கும். இவற்றை யாரும் இரவல் வாங்கலாம் எந்நேரமும் படிக்கலாம். ஆனால் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களோ, பயிற்சிப் புத்தகங்களோ அங்கொன்று இங்கொன்றாக ஓரிரண்டு காணப்படும். அவற்றை கூட இரவல் பெற முடியாத நிலை காணப்படும். இப் படியாகவே நூலகங்கள் பல இன்று பரந்து காணப்படுகின்றன.

இங்கே கைவிரல்களே கண்ணைக் குத்த முனையும் நிலை தொடர்கின்றது. மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக ஊக்க சக்தியாக ஒரு படிக்கல்லாக இருக்க வேண்டிய சமூகமே தடைக்கல்லாக இருந்தால் யாழ்ப்பாணக் கல்வித்தரம் வீழ்ச்சி அடையத்தானே செய்யும் மொத்தத்தில் எல்லோருமே ஒரே வழியை காட்டினால் அவர்கள் அங்கே தானே செல்வார்கள். பின்னர் எய்பவராக சமூகம் இருந்து கொண்டு மாணவர் என்ற அம்பை நோவதில் என்ன பயன்?


சி.இளஞ்சோபன்.
தரம் :- 12A
கலைப்பிரிவு 2006

## சுனாமி

சுனாமி என்று அழைக்கப்படும் பேரலைகள் தமிழில் "துறைமுக அலைகள்" எனப்படும். இவை கடலடியில் ஏற்படும் பூகம்பம் காரணமாக ஏற்படும். சுனாமி ஏற்படும் இடத்தில் இவ்வலைகள் பெரிதாகத் தோன்றுவதில்லை. கடலின் நடுப்பகுதியில் மீன்பிடிப்போரோ, பாரிய கப்பல்களோ இவற்றை உணர முடிவதில்லை. கடலின் கீழே சுருள் சுருளாக கரிய நிறத்தில் தோன்றும் இவ்வலைகள் கரையை அண்மித்ததும் சுமார் 40 அடி உயரம் வரை மேலெழுந்து வரக்கூடியவை. இத்தகைய பேரலைகள் மும்முறை கரையைத்தாக்கும். இத்தாக்கம் அணுக்குண்டுத்தாக்கங்களை விடப் பன்மடங்கு பலமானதாக இருக்கும் கடந்த 26/12/2004 இல் இலங்கையைத் தாக்கிய சுனாமி சுமார் 4 மீற்றர்கள் வரை உயரமானது. அதன் தாக்கம் நாகசாகி ஹிரோசிமா அணுகுண்டுத்தாக்குதல் போன்று 30 மடங்கு பலமானது. என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சுனாமி தாக்கத்தால் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பலியாகினர். பாரிய சொத்து இழப்பும் ஏற்பட்டது. சுனாமி அலைகளைக் கண்டு பிடிக்கும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் இலங்கையில் அது பொருத்தப்படவில்லை. இனி இக்கருவி பொருத்தப்படுதல் அவசியம் என உரைப்பட்டுள்ளது. உலகில் சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மனித உயிர்களைக் குடித்த சுனாமி சுமாத்திராவிற்கு அண்மையில் ஏற்பட்ட கடல் பூகம்பத்தின் விளைவாகத் தோன்றியதாகும். சுனாமி பலநூற்றாண்டுகளிற்குப் பின் முதன் முறையாக இலங்கையைத் தாக்கியுள்ளது.

விடியும் வேளை,
இலங்கை வானொலி
04.01.05

## Tamil Key Board



# கணிதத்தில் நிறைவைக் கண்ட மாமேதை

தொன்று தொட்டு உலகில் எண்ணுதலுக்கும் கணக்கிற்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. "எண்ணும் எழுத்தும், கண்ணெனத் தகும்" என்ற மூதாதையரின் வாக்கு இக்கூற்றுக்கு சான்றாகும் . இக்கூற்கூக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீநிவாச ராமானுஜன் ஆவார். கணித உலகினுள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய பெரியார் ஆவார் உலகிலேயே "கணித மாமேதை" என அழைக்கப்பட்ட ஒரே ஒரு கணித வல்லறிஞர் இவரேயாவார்.

இப்படிப்பட்ட கணித மேதை 1887 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி தமிழ் நாட்டிலுள்ள கும்பகோணத்தில் பிறந்தார் இவர் தாய் தந்தையர்கள் கோமாளத்தம்மாள் ஸ்ரீநிவாச அய்யங்கர் ஆவார்கள். இவர் தனது இளம் வயதிலே கணிதத்தில் வல்லுனராக விளங்கினார் உதாரணம் இவரை நோக்கி ஒருவர் "இரவில் சுடுகாட்டை நோக்கி பயணம் செய்யக் கூடாது" என்று கூறினார். இதற்கு ராமானுஜன் இவ்வாறு பதிலளித்தார் ஏன் மாமா போகக்கூடாது எல்லோரும் ஒருநாள் அந்த இடத்துக்குப் போய்ச் சேர வேண்டியவர்கள் தானே "பிறப்பு" என்னும் கணக்கிற்கு "இறப்பு" என்னும் தீர்வு இருக்கத்தானே செய்யும். பிறப்பு என்பதும் நான்கெழுத்து இறப்பு என்பதும் நான்கெழுத்து இந்த நான்கை நான்கால் வகுத்தால் ஈவு ஒன்று தானே வரும் என்றார்.

இதிலிருந்து இவரது கணிதப் பற்று எவ்வளவு என்பது புலனாகின்றது. இவர் தனது 13 வயதிலே எண்கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகியவற்றை கற்றுத் தேறினார் 1904 ஆம் ஆண்டில் கணிதவியலுக்கான கல்லூரிப் பரிசை இவர் தட்டிக் கொண்டார். நூறுவீத புள்ளி என்பது அவரது தகைமையை குறைத்து மதிப்பிடுவதாகும் என அவரது ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டார்கள்.

ஆனால் , அவர் தனது 17வது வயதில் தொடர்ந்து 3தடவை FA பரீட்சையில் சித்தியடையவில்லை. ஆனால் அவர் கணிதத்தில் 100புள்ளிகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1911 ஆம் ஆண்டு இந்திய கணிதச் சங்கத்தின் சஞ்சிகையில் "Some Propeties of beronoullis number" என்னும் கட்டுரையை வரைந்தார். இக்கட்டுரை மூலம் அவரது கணிதத்திறமையை முழு உலகும் அறிந்து கொண்டது.

ஒரு சமயம் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியரான G.H Hardy என்பவர் மிகக் கடினமான சில கணிதப் புதிர்களை வெளியிட்டு அதற்குரிய சரியான பதில்களை கேட்டிருந்தார். அப்போது இவருக்கு வயது 25 Hardy யின் கணிதப் புதிர்களுக்கு அவர் மிகவும் சுருக்கமான வழியில் விடை கண்டு அனுப்பினார் அவற்றைப் பார்த்த Hardy இவரின் கணிதப் புலமையை வியந்து அவரை கணிதவியல் ஆராய்ச்சிக்காக இங்கிலாந்துக்கு அழைத்தார் இராமானுஜன் லண்டன் சென்று Hardy உடன் பல ஆராய்ச்சிகள் செய்தார்.

இராமானுஜன் லண்டனில் தங்கியிருந்த 1914-1917 வரையான காலப்பகுதியில் 21 ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். இவரின் கட்டுரைகள் மேனாட்டு கணிதவியல் அறிஞர்களை பெருவியப்பில் ஆழ்த்தின. மேனாட்டு கணித சஞ்சிகையில் இவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் "ராமானுஜன் சாதாரணர் அல்லர் அற்புத சக்தி வாய்ந்த இந்தியாவின் கணித மேதை உலகம் போற்றும் ஒரு மாமேதை" எனப் புகழ்ந்தார்.

இராமானுஜன் கணிதப் புலமைக்காக London Roxal Society அவரை கௌரவித்து 1918 இல் "புலவர்" பட்டத்தை வழங்கியது. London Dirty College இல் புலவராக நியமனம் பெற்றார்.

இவர் தனது 32வது வயதில் மிகவும் நோய்வாய்ப்பட்டிருக்கையில் படுக்கையில் இருந்த படி தனது குருவான Hardy க்கு கடைசிக் கடிதத்தில் கணிதப் புதிரை எழுதி அனுப்பினார். 1920 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி இவ்வுலகிலிருந்து விடை பெற்றார்.

ஆசிரியை:- திருமதி.ந.சுப்பிரமணியம்

# தடம் மாறிச் செல்லும் யௌவனம்

மனித வாழ்க்கையை மூன்று பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள் அறிஞர்கள் பிள்ளைப்பருவம், யௌவனப்பருவம், முதுமைப்பருவம் என்று அழகாய்ப் பகுத்துப் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பருவங்களில் யௌவனப்பருவம் என்பது பெரும் பொக்கிசம். இன்னும் கூறப்போனால் மீதமிருக்கின்ற முக்கால்வாசி வாழ்க்கைக்கும் இதுதான் அத்திவாரம். உலகிலே யௌவனத்தை கடந்து வராத முதியவர்கள் எவருமே இல்லை. யௌவனப்பருவத்தில் தமது வாழ்க்கையை தொலைத்தவர்களும் உள்ளனர்.

உலக சனத் தொகையில் 1.5 பில்லியன் பேரும் இலங்கைச் சனத்தொகையில் 6 மில்லியன் பேரும் யௌவனப் பருவத்தைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். உலக சனத் தொகையில் $\frac{1}{3}$ பகுதியினர் யௌவனப் பருவத்திலேயே காணப்படுகின்றனர்.

10 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டோர் யாவரும் யௌவனர்களே, இவ் யௌவனப்பருவத்தையும் மூன்றாக பிரித்துள்ளனர்.

10 – 14 வருடங்கள் - முன் யௌவனப் பருவம்
15 – 18 வருடங்கள் - இடை யௌவனப் பருவம்
19 – 24 வருடங்கள் - கடை யௌவனப் பருவம்

யௌவனர்களின் சிறப்பியல்புகள் சில

- மகிழ்ச்சியுடன் இருத்தலும் குதூகலமாக காலம் கழித்தலும்
- சுதந்திரமாக இருத்தல்
- ஆடல் பாடல் போன்ற கலையம்சங்களில் ஆர்வம் காட்டல்
- சுறுசுறுப்புடன் செயற்படலும் ஆவமுடமையும்
- சமூக இணக்கப்பாடு
- பொறுமையின்மை
- சவால்களை அறை கூவல்களை எதிர் கொள்வதில் விருப்பு
- முடிவெடுத்தல்
- விரைவில் மனத்தாக்கத்திற்கு உள்ளாதல்
- அதிகாரத்தை எதிர்த்தல்
- கையாண்டு பார்த்தலில் ஆர்வம் காட்டல்
- அன்பு, காதல், எதிர்ப்பாற் கவர்ச்சி போன்ற புத்துணர்வுகள் தோன்றுதல் என்பனவாகும்..

இவை போன்ற சிறப்பியல்பைக் கொண்ட பருவமே யௌவனப் பருவமாகும். இப்பருவத்தில் ஒரு பொதுவான பண்பு குழவாகச் சேர்தலாகும். ஒத்த கருத்துக்கள், ஒத்த அபிலாசைகள் கொண்டோருடன் பழகுவதில் காட்டும் விருப்பு, அவர்களுடன் குழுவாகச் சேர்தல் ஆகியன இப்பருவத்தினரிடையே காணப்படும் பொதுவான பண்புகளாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழுவின் மற்றைய அங்கத்தவர்களின் கருத்துக்களை அவ்வாறே ஏற்றுக் கொள்வதும் அவற்றிற்கு அமையச் செயற்படுவதுமே இப்பருவத்தினரின் பண்பாகும் இது குழுவில் தொடர்ந்து இடம் பெறுவதற்கான ஒரு முயற்சி எனக் கருதப்படுகின்றது.

இன்றைய யௌவனர்கள் கூடுதலாக நல்வழியில் செயற்படாமல் தீய வழியிலே செயற்படுகின்றார்கள். சினிமாப் படங்களைப் பார்த்து விட்டு கதாநாயகர்களைப் போல மாறு வேடம் தரித்துத் திரிகின்றார்கள். இதனை அழகான சம்பாஷனையில் ஒரு வயோதிபர் இவ்வாறு கூறுகின்றார்.

"என்ன தம்பி இப்படி தலையை மொட்டை அடித்திருக்கிறாய் பழனி அல்லது திருப்பதிக்குப் போய் ஏதும் நேத்திக் கடன் கழித்து விட்டு வந்தனீரோ"

அதொன்றுமில்லை, ஆளவந்தான் படம் பார்த்தனான் கமலைப் போல மொட்டை அடித்தால் என்ன என்று யோசனை வந்தது அதுதான்.

இதுதான் இன்றைய யௌவனத்தின் பண்பு. தென் இந்தியச் சினிமாவில் ஒரு மனிதனின் வாழ்க்கையை 3 மணித்தியாலத்தில் காட்டுகிறார்கள் இதனைப் பார்த்து யௌவனர்கள் 3 மணித்தியாலம் தான் வாழ்க்கை என நினைத்து என்னென்னவோ செய்கின்றார்கள். அதுமட்டுமா படத்தில் உள்ள நடிகர்களைப் போல் புகைப் பிடித்தல், வாகனங்களைப் பெருந்தெருக்களில் விரைவாகச் செலுத்துதல், பஸ்வண்டியிலும் புகைவண்டியிலும் மிதி பலகையில் நின்ற படி பயணம் செய்தல் இது போன்ற செயல்களில் ஆண்பிள்ளைகளே பெரிதும் ஈடுபடுவதுண்டு. தான் ஒரு தைரியசாலி என்பதைக் காட்டுவதற்காகவோ ஒரு பெண் பிள்ளையின் கவனத்தை ஈர்த்துக் கொள்வதற்காகவோ இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோரும் உண்டு. இவற்றையெல்லாம் செய்து விட்டு பின்னர் வேதனைப்படுவதும் அவர்களே!

இது ஒரு புறம் இருக்க பெரும்பாலான செயல்களைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்க வேண்டும் எனும் ஆவல் இப்பருவத்திலேயே ஏற்படுவது இயல்பானதாகும் எனினும் அவ்வாறான சில பரீட்சார்த்த செயல்களால் துர் விளைவுகள் ஏற்படுகின்றன. மதுபானம் அருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், ஆபாசத்திரைப்படம் பார்த்தல் இவற்றைப் பரீட்சாத்தமாக ஒரு தடவை பயன்படுத்திப் பார்ப்பதன் மூலம் இவற்றிற்கு அடிமைப்பட்டு அதனையே தொடர்ந்து செய்யத் துடிகின்றார்கள் அவை கிடைக்காத பட்சத்தில் கொலையே செய்யத் துணிகின்றார்கள். இதுவே இன்றைய யாழ் யௌவனர்களிலும் பரவியுள்ளது. அண்மைக் காலங்களில் கோஷ்டி மோதல், ஆள்கடத்தல் A/L பரீட்சை எழுதிக் கொண்டிருந்த சமயத்தில் மாணவியை கடத்தும் செயலிற்கு கூட யௌவனர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அம்மாணவியின் எதிர் காலம் யாது? இவற்றை செய்து விட்டு பிடிபட்டு பத்திரிகைக்கு போஸ் கொடுக்கும் காட்சியை பார்த்திருப்பீர்கள் அப்போது தாங்கள் பெரிய தைரிய சாலிகள் வீரதீரச் செயலைச் செய்தவர்கள் போல் காட்சியளித்திருந்தனர். இவர்களின் வயது 16 — 21 வரை இதுதான் இன்றைய யௌவனர்களின் உலகம். இவ்வாறு இன்று உலகிலுள்ள யௌவனத்தினது தீய செயல்கள் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் நீண்டு கொண்டே செல்கின்றது.

இன்று உலகில் யௌவனர்கள் வறுமை, பட்டினி, கதியற்ற நிலை என்பனவற்றை எதிர் நோக்குகின்றனர். இந்நிலை பெண்களும், யுவதிகளையும் விபச்சாரத்தில் ஈடுபட வைக்கின்றது. இதனால் பல யௌவனச் சிறுமிகள் பாலுறவுப் பிழிவு, உடல் ரீதியான உள ரீதியான விருத்தியில் நாசகரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வேண்டப்படாத பத்திரமற்ற பாலுறவு வேண்டப்படாத கர்ப்பகங்கள் அல்லது பாலியல் ரீதியான தொற்று வியாதிகள் HIV எயிட்ஸ் நோய்களுக்கும் இடமளிக்கின்றது. வறுமை, பட்டினி ஆகியவற்றால் தான் யௌவனப்பருவத்தினர் சீரழிகின்றார்களா? இல்லை நன்கு வசதி படைத்த யௌவனர்களும் நவீன கணனித் தொழில் நுட்ப வலைகளில் சிக்கி வாலிபத்தை தடம் புரள வைக்கின்றார்கள்.

இன்றைய கால காட்த்தில் இணையத் தளங்கள் மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து விட்ட நிலையில் அன்றாட சிறு கருமத்திற்காக இணையத் தளங்களை நாடும் நிலையில் அவை மனித முன்னேற்றத்தில் பங்கேற்றாலும் யௌவனத்தினரை இணையத் தளங்கள் அவர்களின் எதிர் காலத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இன்று அண்மைக் காலமாக ஆய்வுகளின் படி இணையத் தளங்களில் ஆபாச வலை அமைப்புக்களில் உலாவருபவர்களின் எண்ணிக்கையே அதிகம் என தகவல் வெளியாகியிருக்கின்றன. யௌவனப் பருவத்தில் இயல்பாகவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் செக்ஸ் உணர்வு அதிகரித்திருக்கின்றது. இது இயல்பாகவுள்ள விடயம், முன்பெல்லாம் பெண்கள் பெண்களிடமும் ஆண்கள் ஆண்களிடமும் பேசிக் கொள்வார்கள் செக்ஸ் புத்தகங்களை மறைத்துப் பார்ப்பார்கள் ஆனால் இது நவீன காலம் நிலமை மாறிவிட்டது.

விஞ்ஞான ரீதியாக இன்ரநெற் கபேக்கள் மூலம் இவர்கள் தமது செக்ஸ் உணர்வுகளுக்கு வடிகால் தேடிக் கொள்கிறார்கள் இந்த செக்ஸ் காட்சிகள் பார்ப்பது வடிகால் என்ற நிலை மீறி தூண்டுதல் என்ற கட்டத்தை அடைந்து யௌவனப் பருவத்தினர் திசைமாறிச் செல்கின்றார்கள் இவற்றால் இன்று பரவலாக பேசப்படும்

ஆட்கொல்லி நோய் AIDS தாக்கத்திற்கு உள்ளாகின்றனர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு மனித இனத்தின் சராசரி வயது 20 அல்லது 30 என்று தான் இருந்தது.

அறிவியலும் மருத்துவமும் வளர்ச்சியடைந்து 60,70 என மனிதனின் சராசரி வயதைக் கூட்டி அழகு பார்த்தார்கள் இன்றைய நிலையில் சராசரி வயது மனிதனுக்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தால் 90, 100 ஐயும் தாண்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை வயது அசுர வேகத்தில் பின்நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளது. உலகின் பணக்கார நாடுகளில் ஒன்று போர்ட்ஸ் வானா என்ற நாட்டில் ஒரு மனிதன் சராசரி வயது இன்றைக்கு முப்பது ஆக குறைந்து விட்டது கடந்த ஆண்டில் மட்டும் 50 இலட்சம் பேர் புதிதாக எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் யௌவனப்பருவத்தினரே அதிகம்.

**"உதிர்ந்த மலரிதழ்கள் மீண்டும் புதுமலராக மாற மாட்டா"**

யௌவனப் பருவத்திலே தோன்றிய AIDS அவர்களிற்கு மட்டுமல்லாது அந்நோய் தனது மனைவி, ஏதுமறியாத பச்சைக் குழந்தை யாவருக்கும் கொடுத்துத்தான் இவ் உலகை விட்டுச் செல்கிறார்கள்.

யௌவனப் பருவத்திலே தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்துதல், களவு, கொள்ளை கற்பழிப்பு, வன்முறைகளைக் கையாளல், ஆபத்தான நடத்தைகளைக் கையாளல், விரக்தி, சீர்குலைக்க முனைதல், குழப்பம் விளைவித்தல், உடனடித் தீர்வுகளை எதிர் பார்த்தல் போன்ற வழிகளில் தடம் புரளுகின்றனர். இவற்றிற்கு முக்கியமான காரணங்களாக கல்வி வேலையில்லாப் பிரச்சினை யுத்தம் போன்றன விளங்குகின்றன.

யௌவனத்தினை ஆக்க பூர்வ தன்மையான பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் போன்றவற்றில் ஈடுபடச்செய்தல், பல்வேறு சமூக நலன்புரி வேலைகளில் ஈடுபடச் செய்தல், புத்தாக்கத்தை உருவாக்குதல், கைகயாளுதல், சமூக சீர்திருத்தம், ஜனநாயக சமூகம், சமூக சேவை, சூழலைப் பேணல், சிரமதானம், புதியன தேடல், அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட வைத்தல், அர்ப்பணிப்புடன் செயற்பட வைத்தல், சுயதொழிலில் ஈடுபட வைத்தல், புத்துணர்வு உலக சமாதானம் போன்ற செயல்களில் ஈடுபட வைத்து உலகின் நல்லதொரு நாளைய சமுதாய தலைவர்களை யௌவனத்தினரை நல்வழியில் யாவரும் வழிகாட்டுவோமாக!

உசாவிய நூல்கள்
1. மலர்ந்த யௌவனம் (யௌவனர் சுகாதார வழிநடத்து குழுவின் வெளியீடு – ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் - 1996)
2. சிறுவர் மீது ஆயத மோதலின் தாக்கம் (கிரேஷா மவேயின்) அறிக்கை – ஐக்கிய செயலாளர் நாயகத்தின் நிபுணர்)
3. தினக்குரல் பத்திரிகை ( புதன் வசந்தம் - 11 – Sep – 2002)

ஆசிரியர்
திரு.ப.சிவசுதன்

வீரசிங்கன்

# மனிதனைப் பக்குவப்படுத்தும் சமயம்

சமய உணர்வு, அல்லது சமயச் சிந்தனை, மதம் அல்லது கடவுள் தொடர்பு, வாழ்க்கைத் தத்துவம் போன்ற சமய சம்பந்தமான சிந்தனைகளில் கவனம் செலுத்தாத சிலர் முற்றும் துறந்த முனிவர்கள் போல பேசலாமா என்று தெரிந்து பேசுவார்.

'சமயம்' என்பது இறைவனுடன் தொடர்புடைய சொல்லாக இருக்கலாம், ஆனால் இறைவனைப் பற்றி பேச ஆரம்பிக்கும் போதே இது வாழ்க்கைக்குக் பொருத்தமற்றது என எண்ணுவது தவறு.

சமய உணர்வின் அடிப்படையிலேயே உலகம் இயங்குகிறது உள்ளம் உள்ள மனிதர்கள் அனைவரும் சமய உணர்வு பெற்றுத் திகழ்பவர்களே!

ஒவ்வொரு தேச மக்களுக்கும் சமய முறைகள் வேறாக இருக்கலம் ஆனால் அச்சமய உணர்வுகள் போதிக்கும் அன்பும் தொண்டுள்ளமும் ஒன்றே

சமயம் என்றால் என்ன? சமய உணர்வு என்பது யாது? சமயம் என்பதை மெய்ஞ் ஞானிகள் சமையலுக்கு ஒப்பிடுவர் அதாவது சமைக்காத உணவுப் பண்டங்களைப் போன்றது தான் சமயமற்ற வாழக்கை சமைத்த உணவு போன்றதே மனிதனின் மனம் பக்குவப்படுத்தப்படும் சமய வாழ்க்கையாகும்.

சமயத்தின் வழி சமய உணர்வோடு ஒரு மனிதன் ஒழுகும் போது அவனின் ஆத்மா தூய்மையடைவதோடு அவனும் பண்பட்டவனாகின்றான். ஐம்புல அவதானங்களினால் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற மனிதன் புலனுணர்வுகளுக்கப்பாலான மன உணர்வுகளுக்கும் சிலவேளைகளில் ஆளாகிவிடுகிறான். அவ்உணர்வுளை அவனால் அனுபவிக்க முடியுமே தவிர அவ் அனுபவத்தை அவனால் வார்த்தைகளில் வடிக்க இயலாது. ஏனெனில் அவ் உணர்வை கண்ணால் காணமுடிவதில்லை இருந்தபோதிலும் அவ் உணர்விற்கு இலக்காகவும், மறை பொருளாகவும் ஏதோ ஒரு சக்தி உந்துதலாய் இருப்பதை அவனால் உணரமுடியும். இதிலிருந்து அச்சக்தியை, அவ் உண்மையை உணர்ந்து கொள்ள அவன் மனம் கிளறவே அதனை உணர்ந்து கொள்ள முயல்வான் இவ்வாறு முயலகின்ற அவன் என்றோ ஒருநாள் பரிபூரண விளக்கத்தை பெறுவதால் பிறவிப் பெரும்பயனை அடைகிறான்.

குழந்தையாக மண்ணில் வந்து வீழும் மனிதன் வயது ஏற ஏற தன்னையும் தன் சூழ்நிலையையும் மட்டுமே சிந்திப்பதோடு அவ்வட்டத்திற்கு உள்ளேயே தன் அறிவையும் உணர்வையும் முடக்கிக் கொள்கிறான். ஆனால் சாலம் செல்லச் செல்ல தனக்கப்பால் இந்த பிரபஞ்சத்தில் நிகழும் விந்தைகளை எண்ணித் திகைப்படைகிறான் மனிதனின் மனம் அடுத்தகட்டத்திற்கு தாவுகிறது தான் கண்ட உணர்வுகளின் அர்த்தத்தை தேடுகிறான்

உலகின் மிக உயர்ந்த உயிர் என்ற அவனது எண்ணத்தின் குறுக்கே உலகின் மற்றய உயிரினமெல்லாம் எதற்காக என்ற வினா உரு தெளிவை ஏற்படுத்துகின்றது பிற உயிரினங்களிற்கும், மனித உயிர்களுக்குமிடையே ஆழ்ந்த தொடர்பிருப்பதை அறிய முற்பட்ட அவனது உணர்வு சற்றே விசாலமடைகின்றது.

யாவும் ஒன்றே என்ற எல்லையை உணர்வு தொடும் போது உலகத்தின் ஒவ்வோர் அணுவும் ஒவ்வொரு நியதிக்குட்பட்டே இயங்குவது தெளிவாக, உலக நியதியை வகுத்து அதனை ஆட்டுவிப்பவர் அல்லது ஆட்டுவிக்கும் சக்தியை உணர முற்படுகையில் மனிதன் சமய உணர்வு எல்லையைத் தொட்டுவிடுகின்றான்.

அதாவது எல்லாவற்றிற்கும் (அவற்றினது சக்திக்கும் ஆற்றலுக்கும்) மேலான ஏதோ ஒன்று எங்கோ இருக்கிறது என்பதை மனிதன் உணர்வது அவனது பரிபூரண பக்குவ நிலை ஆகும். இதுவே 'முத்தி' ஆகும்

முத்தியை அடைவதற்கு 'நான்' என்னும் நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்ளும் அகந்தை அழிய வேண்டும் அதாவது ஐம்பூதங்களின் சேர்க்கையாக

அமைந்திருக்கும் மனிதன் தான் என்ற அகந்தை கொண்டு தன்னை மட்டும் என தத்துவப்படுத்துவது தவறாகும்.

நான் என்ற அகந்தை உள்ள போது யாவும் ஒன்றே என்ற உணர்வு அற்றுப் போகிறது. அதனால் மனிதன் தனிமைப்படுத்தப்படுகிறான் இதனால், இறைமையை புறக்கணித்து அவன் வகுத்தளித்த நியதியை மீறுகின்றான்.

ஆனால் தனிமையை உணரும் போது யாருமே சந்தோஷப்படமாட்டார்கள் உதாரணமாக பெரும் ஜனத் திரளுக்கு மத்தியிலே ஒரு மனிதன் மட்டும் யாருடனும் பேசாது மௌனமாய் இருந்தால் அவன் தனிமைப்படுத்தப்படுவதோடு மட்டுமல்ல வருத்தமும் கொள்கிறான் ஆனால் யாவருடனும் சிரித்து பேசி மகிழ்ந்தால் இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

இதனால் சமுதாயத்துடன் சேர்ந்து சமுதாயத்தின் ஓர் அங்கமென ஆகிவிட்டால் மனித சிந்தனைக்கும், செயலுக்கும் தனி அர்த்தமும் மதிப்பும் ஏற்பட்டு விடுகின்றது அல்லாவிடின், சமுதாயத் தொடர்பிலிருந்து விடுபட்டு தனிமை வாழ்வில் இன்பம் காணவென முடிவெடுத்தால் குறிப்பிட்ட காலத்தின் பின் மன அமைதியே கெட்டு அதன் பயனாக வாழ்க்கை மகிழ்ச்சியற்றுப் போகும்.

ஆகவே அகந்தை விடுத்தாலொழிய இறைவனை உள்ளபடி உணரமுடியாது. முத்தியையும் அடைய முடியாது.

இறைவன் மீது பக்தி கொண்ட நாயன்மார்கள் ரிஷிகள் சித்தர்கள் ஆகியோர் மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகுத்து வைத்த நெறிமுறைகளே சைவ சமயத்தால் உரைக்கப்படுகிறது விதி வழியே வாழ்க்கை செல்வது என்பதும் மனித வாழ்வின் ஆதி மூலமே இறைவன் என்பதும் "பிரபஞ்சத்தில் காணும் யாவும் பிரம்மமே" என்பதும் சமய நெறியின் சாரமாகும் இதை ஔவையார் தனது மூதுரையில் கூறும் போது

"புண்ணியமாம் பாவம் போம் போன நாட் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்"

எனச் சமய நெறி காட்டும் கருத்தை குறிப்பிட்டுள்ளார் உலகில் வாழும் உயிரினங்களின் நன்மை தீமைகளுக்கெல்லாம் முற்பிறவியின் வினைப் பயனே காரணம் என்கிறார் இதைத்தான்

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தே – வேண்டா
நமக்கும் அதுவழியே நாம் போம்மளவும்
எமக் கென்னென்றிட்டுண்டிரும்"

இப்பாடலின் கருத்தை மனதிற் கொண்டு மனிதன் ஒழுகுவானேயானால் வாழ்வின் பக்குவம் தெரிந்த ஒரு மனிதனாக துன்பங்களைக் கண்டு துவளாதவனாக இன்பத்தை கண்டு இறுமாப்பு அடையாதவனாக என்றும் எப்போதும் அமைதியாக வாழ்வும் உயர்வான சிந்தனையும் அன்புள்ளம் கொண்டவனாக வாழமுடியும்.

சட்டமோ, நீதியோ, காவல்துறை அதிகாரிகளோ செய்ய முடியாத, செய்யமுயன்று தோற்று வருகின்ற ஒரு காரியத்தை சமய உணர்வு வெற்றி கொள்ளச் செய்து விடுகின்றது, இன்று மனிதனிடத்தில் காணும் தீய சக்திகள் அனைத்தையும் விலக்கி மனிதனை மிகச் சிறந்த சமுதாய வாதியாக மாற்றும் பெருமை சமயத்திற்கே உண்டு என்று சொல்லமுடியும் என்றால் சமயத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையில் எவ்வளவு நெருக்கமான தொடர்பு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்

உண்மையில் சமுதாய வாழ்விலும் தனிமனிதன் வாழ்விலும் சிக்கல்களை அறுத்து நிம்மதியாக மன நிறைவுடன் வாழ உதவும் அற்புதமான சாதனமே சமயமும் சமய வாழ்வும் உண்மையான சமய உணர்வு சமய நம்பிக்கையும் கொண்ட உத்தமர்களை சமயத்துறையில் போலிகள் மலிந்து விட்டதுதான் இதற்கு காரணமாகும் சமய உணர்வு

கொண்டவன் அன்புள்ளம் கொண்டவனாக இருக்கிறான். சமய உணர்வு சுயநல மனப்பான்மையை அகற்றி பொது நல மனப்பான்மையை அமைக்கின்றது. உண்மையான சமய உணர்வு கொண்டவன் உலகம் முழுவதும் ஒன்றே உலக மக்கள் அனைவரும் சகோதரரர்கள் என நினைக்கின்றான். இதற்கு சுவாமி விவேகானந்தர் வாழ்வு ஒரு சிறந்த உதாரணமாகும் இவரைப் போன்று எல்லோரும் சமய நெறியைப் பின்பற்றி வாழ்ந்தால் சமுதாயம் நன்னிலை அடையும்.

ஆசிரியை
திருமதி.க.அருளானந்தம்.

"மனிதன்" எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கிறது எனக்கு மனிதனை விட சிறந்த கருத்துக்கள் இல்லை மனிதன் மட்டும் தான் எல்லாப் பொருட்களுக்கும் எல்லா கருத்துக்களுக்கும் படைப்பாளி. அற்புதம் செய்வோன் அவனே இவ்வுலகில் அற்புத அழகுப் பொருட்கள் எல்லாம் அவன் உழைப்பால் ஆனவை நான் மனிதனுக்குத் தலை வணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவிற்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை. மனிதனே எல்லாப் பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் படைப்பாளி.

மார்க்ஸிம் கோர்க்கி

# கல்வி சார் ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும்
## (Educational Guidance and Councelling)

மனித தேவைகளும் அதனால் ஏற்படும் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ள இவ் நவீன காலத்தில் மனிதர்கள் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாகின்றான். "வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்வதற்காகும்" ஆனால் மனிதன் அதனை உணர்வதில்லை இதே போன்று மாணவர்களும் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. ஒரு மாணவனுக்கு கல்வி சார் பிரச்சினைகள் அதிகம் எதிர் கொள்ள வேண்டி ஏற்படலாம் கல்வி சார் பிரச்சினைகளை மாணவர்கள் எதிர் கொள்ளும் போது கல்வி சார் ஆற்றுப்படுத்தலும் கல்வி சார் சீர்மியமும் (Educational Guidance, Educational Councelling) அவர்களுக்கு அவசியமான ஒன்றாக வேண்டப்படுகிறது.

பழைய காலத்தில் மக்களுக்கு கூடுதலாக கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்த போது ஒருவருக்கொருவர் அன்றாட வாழ்க்கையிலேயே உதவி, ஒத்தாசை, மிகுந்த அன்பு காட்டல், ஆலோசனை கூறல்(ஆற்றுப்படுத்தல்) எல்லோரும் கலந்து பேசி சிறந்த தீர்மானங்களை எடுத்தல், அதனை நிறைவேற்ற உதவுதல் போன்றன பல்வேறு உதவி ஒத்துழைப்பு இருந்தமையால் மனச்சுமைகள், நெருக்கடிகளுக்கு இடமே இருக்கவில்லை. இன்றைய அவசிய தேவையான ஆலோசனையும், வழிகாட்டலும், புதிதாக தோன்றிய ஒன்றல்ல. விரிந்த குடும்பத்திலே இருந்து வந்த ஒன்றுதான் ஆனால் இன்று வேலைச்சுமை, வேலை நெருக்கீடு காரணமாகவும் தனிக்குடும்பங்கள் உளத்தாக்கம், கணவன் மனைவி பெற்றோர் பிள்ளைகள் பிரிந்து வாழும் நிலமையும் பல்வேறு பிரச்சினைகளுக்குமாக சமுதாயத்தில் "ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும்" ஒவ்வொரு குடும்பத்திற்கும் மனிதனுக்குமே அவசியமானதொன்றாகி உள்ளது.

சூழலின் தேவைகளுக்கு ஒரு மாணவன் ஈடு கொடுக்க முடியாத நிலையில், முரண்பாடுகள், இசைவாக்கப் பிரச்சினைகள் மொட்டவிழத் தொடங்குகின்றன. மாணவன் தேவைக் கேற்ப தன்னை இசைவாக்கிக் கொள்ளல் வேண்டும் கல்விசார் இசைவாக்கம்
1 – தன் நிலை மாற்றம்
2 – பிற நிலை மாற்றம்
என இரண்டு வகையில் இசைவாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதாவது தன்னிலை மாற்றம் என்பது சூழலுக்கு ஏற்றவாறு ஒருவர் தம்மை மாற்றிக் கொள்ளுதல் ஆகும் பிறநிலை மாற்றம் என்பது தனக்கு ஏற்ப சூழலை மாற்றி அமைத்துக் கல்வி சார் இசைவாக்கத்தை ஏற்படுத்துதல் ஆகும். தேவைக்கு ஏற்ப சூழலைத் தனக்கு இசைவாக்கியும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றி இசைவாக்கம் பெறுதலும் எனலாம்.

மாணவர்கள் கல்வி கற்றற் செயற்பாட்டில் நாளாந்தம் கல்விச் சுற்று வட்ட முடிவிலும் பல் பிரச்சினைகளை, இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது தற்போது தேவைகள் அதிகரிப்பு, வேலைச்சுமை, விரக்தி, உளத்தாக்கம், நெருக்கீடு என்பனவற்றாலும் மாணவர்களுக்கு பல்வேறு இடர்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. இந் நிலையில் உள்ள மாணவர்களுக்கு (கல்வி) ஆற்றுப்படுத்தலும், சீர்மியமும் மிக மிக வேண்டப்படுகிறது.

ஆற்றுப்படுத்தல் என்பது ஒழுங்கமைத்து வழிப்படுத்தலாகும். சீர்மியம் என்பது தாமே சிந்தித்து நியாயம் கண்டு தானே தன்னைத் தன்னுள்ளாகப் பார்த்தலாகும் ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும் கட்டளை இடும் பணிப்பு நடவடிக்கைகள் அல்ல திணிப்பும் ஆகாது மாணவனுக்காக ஆசிரியர் அல்லது சீர்மியர் மேற்கொள்ளும் தீர்மானங்கள் அல்ல மாணவனின் பிரச்சினையை ஆசிரியர் உள்வாங்கி அவர் சுமக்கும் நடவடிக்கையும் இல்லை.

எனவே பிரச்சினையுடன் வரும் மாணவன் தானே சிந்தித்து தனது பிரச்சினைக்கு தானே நியாயம் கண்டு தானே சில பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் தொழிற்பாடே ஆற்றுப் படுத்தலும் சீர்மியமும் ஆகும். இதனால் தான் ஆற்றுப்படுத்தல் "தன்னை தன்னுள்ளாகப் பார்த்தலுக்கு உதவுதல்" எனக் கருத்துரைக்கப்படுகின்றது.

ஆற்றுப்படுத்தல் மாணவரின் தரவுகளுக்கும் சூழலின் தரவுகளுக்கும் இடையே இசைவாக்கத்தை ஏற்படுத்த துணை செய்ய வேண்டும் இதனை இரண்டு வழிகளில் செயற்படுத்த முடியும்.

1. மாணவரின் தனியாள் ஆற்றல் அவருக்கே உரிய தனித்துவமான நிலவரங்கள் அவரின் பலம் பலவீனம் முதலியவற்றை யதார்த்த நிலையில் மாணவனுக்கு புரிய வைத்தல்.
2. சூழலின் தேவைக்கும் கேள்விக்கும் ஏற்றவாறு தம்மை மாணவன் மதிப்பீடு செய்யவும் உருவாக்கிக் கொள்ளவும் உரிய உள ஆற்றலை வளர்க்க உதவுதல் ஆகும்

எந்த ஒரு மாணவனும் தனக்குள்ள பிரச்சினையை தனக்கு இசைவான ஓர் ஆசிரியரிடம் அல்லது அதிபரிடம் அல்லது சீர்மியராக செயற்படும் ஆசிரியரிடம் தனது பிரச்சினையினையும் அதற்கான பின்னணியினையும் தனது உளக்கிடக்கையையும் வெளிப்படுத்தல் வேண்டும். பிரச்சினை உள்ள மாணவர்கள் சீர்மிய நாடி எனவும், ஆற்றுப்படுத்துபவர் சீர்மியர் எனவும் கொள்ளப்படுகின்றனர் மாணவர்கள் தனது கல்வி சார் பிரச்சினையினை தராத சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி அகம் நிறைந்த சீர்மியரிடம் அல்லது ஆசிரியரிடம் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தும் போதே சிறிது சிறிதாக உளப் பாரம் குறைந்து மன அழுத்தம் குறைவடைந்து இலகுவாக தான் பிரச்சினையில் இருந்து விடுபடுவது போன்ற உணர்வுக்கு உள்ளாவான். அதாவது தனது உள்ளத்தில் அமுக்கப்பட்ட உணர்வுகள் தானாக உருகி வெளிப்பாய விடுதல் வேண்டும். அப்போது பிரச்சினையில் இருந்து [illegible]ான உணர்வு தனது பிரச்சினையினை உணர்ந்து தன்னைத் தன் உள்[illegible] பார்க்கும் நிலமை ஏற்படும்.

மாணவன் தன் பிரச்சினையினை ஒருவரிடம்/ஆசிரியரிடம்/சீர்மியரிடம் உருகிப் பாய விடும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். மாணவன் தனது பிரச்சினையினை தீர்க்க வெளிப்படுத்த சீர்மியர்/ஆசிரியரை நாடும் போது பிள்ளையின் பிரச்சினையை அறியக் கூடியதாக ஆசிரியர்கள் உறுதிப்பாடாக இயங்குதல் வேண்டும் ஆசிரியர்/சீர்மியர் பின்வரும் பண்புத்தகுதியில் இயங்கினால் கல்வி சார் ஆற்றுப்படுத்தலும் சீர்மியமுமாக அமையும் கல்வி சார் ஆற்றுப்படுத்தல் பணியினை முன் எடுப்பவர் பின்வரும் துறை அல்லது வளங்களை வளம்படுத்த வேண்டும்.

1. தனியாள் தரவு
2. உடலியல் தரவுகள்
3. குடும்பப் பின்புலத் தரவு
4. உளவியல் தரவுகள்
5. கல்வி சார் தரவுகள்
6. தொழில் சார் தரவுகள்
7. சமூகம் சார் தரவுகள்
8. சூழல் சார் தரவுகள் ஆற்றுப்படுத்தும்..சீர்மியமும் தொடர்பான தரவுகளையும் கவனித்தல் வேண்டும்

அத்துடன் பின்வரும் தகைமை அல்லது பண்புகளை ஆற்றுப்படுத்தும் பணியினை மேற்கொள்பவர் கொண்டிருத்தல் வேண்டும்.

1. பிரச்சினையான மாணவருடன் மனம் விட்டு நம்பிக்கை வரப் பேசுதல்
2. நேர ஒதுக்கீடு செய்தல்
3. மாணவனின் பிரச்சினையை ஒத்திசைவாகக் கேட்டல்
4. தனது பிரச்சினையை ஒதுக்கி விடல்
5. அடிக்கடி சந்தித்தல்
6. தன்னை வேறுபடுத்தாது மாணவனுடன் சமனாக மதித்தல்
7. இரகசியத் தன்மை பேணல்
8. மாணவரிடையே தனியாள் வேறுபாடுகளை அவதானித்தல்
9. மாணவனின் தனி ஆற்றல் வேறுபாடுகளை அவதானித்தல்
10. பிரச்சினையினை உற்றுக் கேட்டல்
11. தானே பொறுப்பேற்காது மாணவன் பிரச்சினையை உள்ளாகவும் சுயமாகவும் தீர்வு எடுக்க ஆற்றுப்படுத்தல்
12. சீர்மியர் தானாகப் பிரச்சினைகளை தேடி ஆராய்தல் கூடாது.

13. மிகவும் பொறுமையாகவும் ஆர்வமாகவும் பிரச்சினையினைக் கேட்டல்.
14. பிரச்சினைக்கான பின்னணியினை அறிதல்.

பிரச்சினை உள்ள மாணவனை தானாக தீர்வு கண்டு இயங்க வைத்தல் ஆகிய பண்புள்ளவராக இருப்பின் கல்வி சார் ஆற்றுப்படுத்தல் பணி சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

திருமதி.ச.சின்னத்தம்பி
(பகுதித்தலைவர்)

## சமாதானப்புறாவே சீக்கிரம் வந்து விடு

பறவைகளெல்லாம் எங்கே குருதி குடிக்கின்றனவா
பிணங்களெல்லாம் எங்கே படுத்திருக்கின்றனவோ

அதுதான்
நீ வராமல் பாலைவனமான எமது பூமி
படுத்திருக்கின்ற பிணங்களெல்லாம் உன்னை எதிர் பார்த்த
நேற்றைய மனிதர்கள் தான்

அவசரமாய் அழைக்கிறோம் வெண்புறாவே இந்த சந்ததி – உன்னை
மறந்து போக முன்னர் சீக்கிரமாய் வந்துவிடு
அடுத்த சந்ததி உன்னை அடையாளம் காண
சமாதானப் புறாவே சீக்கிரமாய் வந்து விடு.



# புனைகதை இலக்கியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முக்கிய ஒரு கட்டத்தை உணர்த்துகின்றது. பழைய இலக்கிய போக்கின் முடிவினையும், புதிய இலக்கிய போக்கின் தோற்றத்தையும் குறிப்பதாக அமைகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்த வரையிலும் அந்நூற்றாண்டு மிக முக்கிய வளர்ச்சிக் கட்டத்தை உணர்த்துவதாக விளங்குகிறது. பல்வேறு துறைகளில் இலக்கியவாதிகளினதும் அறிஞர்களினதும் சாதனைகளை விளம்பரப்படுத்திய காலகட்டமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு அமைந்தது தமிழ் இலக்கியம் தனக்கென தனிமுத்திரையைப் பதித்துக் கொண்டது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே எனக் குறிப்பிடலாம்.

இந்நூற்றாண்டிலேயே நவீனத்துவத்தின் அடிப்படைகள் கால்கோளாகின்றன. அதாவது இருபதாம் நூற்றாண்டின் புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கான சுவடுகளை நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இனங்கண்டு கொள்ள முடிகின்றது. அந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இலக்கியத் துறையில் நவீன வளர்ச்சிக்கான அடிப்படை வித்துக்கள் வேரூன்றத் தொடங்கின.

ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஜனநாயக மயப்படுத்தப்பட்ட கல்வி முறையினால் பாரம்பரிய கல்வி முறைக்குப் பதிலாக கிறிஸ்தவ மதச்சார்பான கல்லூரிகள் புதிய கல்வி முறையினை அறிமுகப்படுத்தின. சைவ அறிஞர்கள் பாரம்பரியக் கல்வி முறையோடு நவீனக் கல்வி முறையையும் இணைத்து அளிக்கும் முயற்சியை மேற்கொண்டதனால் கல்வி கற்ற புதிய பரம்பரை ஒன்றைத் தோற்றுவிக்க அடிப்படையாயின அது மாத்திரமன்றி அக்காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுயந்திர வசதி காரணமாக தமிழில் அரிச்சுவடி நூல்கள் வெளிவரத் தொடங்கின. இதனூடாக புனை கதைகள் வரத்தொடங்கின எனலாம்.

புனைகதைகளை உலக மொழிகள் எல்லாம் இருபதாம் நூற்றாண்டு இலக்கியமாக ஏற்றுக்கொண்டது. காலதேச வர்த்தமானங்களுக்கமைய இலக்கிய வடிவம் அமையும் என்பதைக் கருத்திற் கொண்டால் ஒரு காலத்தில் செய்யுள் வடிவமாக இருந்த இலக்கியம் இன்று வசன நடையில் அமைந்து நாவல், நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, சித்திரம், விமர்சனம் எனப் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது.

இவ்வடிவங்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குக் கிடைத்தவை என்பதை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஆனால் ஷேக்ஸ்பியர், மில்டன், கிறிஸ், ஷெல்லி, வேர்ட்ஸ்வோத் போன்றவர்களின் படைப்புக்களை இலக்கியமாக ஏற்றுக்கொண்டது போல் பெர்னாட்ஷா, எச்.ஜி.வெல்ஸ், ஜே.பி.பிறிஸ்ட்லி, போன்றவர்களின் படைப்புக்களையும் இலக்கியமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதே அடிப்படையை நமது தமிழ் மொழிக்கும் பொருத்தி நற்காலப் புனைகதைகளை இலக்கியமாக ஏற்றுக் கொள்ளலாம்.

## புனைகதை இலக்கிய முன்னோடிகள்

தமிழைப் பொறுத்தவரை வேதநாயகம்பிள்ளையின் பிரதாபமுதலியார் சரித்திரம் முதல் தமிழ் நாவலாகவும், வ.வே.சுப்பிரமணிய ஐயரின் சிறுகதைகளை முதற் சிறுகதைகளாகவும் கொள்வதுண்டு. வேதநாயகம்பிள்ளையைத் தொடர்ந்து மாதவையா(பத்மாவதி) ராஜம் ஐயர் (கமலாம்பாள் சரித்திரம்) முதலியோரின் நாவல்கள் முன்னோடி நாவல்களாகக் கொள்ளப்படுகின்றன.

சிறு கதையைப் பொறுத்த வரை வ.வே.சு ஐயரை விட சொ.விருத்தாசலம் என்ற புதுமைப்பித்தனையே சிறுகதை முன்னோடியாக இன்றைய இலக்கிய உலகம் ஏற்றுக் கொள்கின்றது. புதுமைப்பித்தன் பி.எஸ்.ராமையா, சீனிவாசன், கு.ப.ராஜகோபாலன் போன்றவர்கள் "மணிக் கொடி" என்ற சஞ்சிகையில் யதார்த்த ரீதியான கதைகளை எழுதினார்கள் தமிழக இலக்கிய உலகில் "மணிக் கொடிக்காலம்" என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு அவர்களுடைய கதைகள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின.

மணிக்கொடி சஞ்சிகைக்குப் பின் சரஸ்வதி என்ற சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகள் வித்தியாசமான பார்வையில் அமைந்து ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இவ்வாறே கணையாழி, தாமரை போன்ற சஞ்சிகைகள் வித்தியாசமான சிறுகதைகளைப் பிரசுரித்து சிறுகதைகளின் யதார்த்த அணுகு முறையை வலுப்படுத்தின.

இக்காலத்தில் இலட்சிய நோக்கில் ஏராளமான நாவல்களும் சிறுகதைகளும் தோன்றின. இவைகளை எழுதியவர்களின் முன்னோடியாக திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி(கல்கி) கருதப்படுகின்றார். இவரைப் போலவே அகிலன், நா.பார்த்த சாரதி, லக்ஷ்மி, ராஜம் கிருஷ்ணன், தேவன், மாயாவி, சூடாமணி போன்ற எண்ணற்ற கதாசிரியர்கள் ஆயிரக்கணக்கான சிறுகதைகளையும் நாவல்களையும் படைத்துள்ளனர். எண்ணற்ற வாசகர்களை இப்படைப்புக்கள் சென்றடைந்துள்ளன. கல்கியின் பார்த்தீபன் கனவு, சிவகாமியின் சபதம் போன்ற வரலாற்று நாவல்களும் அலை ஓசை, அமரதாரா, சோலைமலை, இளவரசி முதலிய சமூக நாவல்களும் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

## யதார்த்தக் கதைகள்

கால ஓட்டத்தில் இந்த இலட்சியப்போக்கிலிருந்து வேறுபட்டு யதார்த்த ரீதியான கதைகளை எழுதுவோர் அதிகரித்தனர் த.ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், ராஜநாராயணன், அசோகமித்திரன், ஜெயந்தன் போன்றோர் இவ்வாறான கதைகளை எழுதிப் புகழ் பெற்றனர். மண் வாசனை வீசும் இக்கதைகளில் பேச்சு மொழி, உரையாடல் இடம் பெறுவதால் இக்கதைகள் பகைப்புலனை யதார்த்தமாக வெளிப்படுத்துகின்றன.

காலப்போக்கில் புனைகதையில் பலவகையான வடிவமைப்புக்கள் இடம் பெற்றன. உணர்வோட்டங்களின் சித்தரிப்பு கவிதைப் பண்பு போறறவற்றைக் குறிப்பிடலாம்.

மௌனி, ராமாமிர்தம் போன்றவர்களின் கதைகளில் யதார்த்தமோ, மண்வாசனையோ இருக்காது உணர்வோட்டங்களின் சித்தரிப்பாக அவை அமைந்திருக்கும் சோமு, சாண்டில்யன், மணிசேகரன் போன்றவர்களின் கதைகள் கவிதைப் பாங்கில் அமைந்திருந்தன இந்த வகையில் ஜானகி ராமன், ஜெயகாந்தன், ராஜநாராயணன் போன்றோர் . எழுதும் ஐதார்த்த ரீதியான கதைகள் மௌனி லா.ச. ராமாமிர்தம் போன்றோர் எழுதும் காவிய மெருகேறிய கதைகள் சாண்டில்யன், கோவை மணிசேகரன் போன்றோர் எழுதும் கவிதைப் பாங்கான கதைகள், கல்கி, அகிலன் போன்றோர் எழுதும் இலட்சியப் போக்கில் அமைந்த கதைகள் போன்ற புனைகதைகளும் உள்ளன.

இவையெல்லாம் எழுத்தாளரின் செய்நேர்த்தியாலும், கலைத்துவ நிறைவாலும் சிறந்த இலக்கியங்களாக அமைந்து வருகின்றன. அத்துடனமையாது அவை வாசகர் இதயங்களைத் தொட்டு அதில் சலனங்களை ஏற்படுத்தி இலக்கியத்தின் பயனையும் பண்பையும் பலனையும் நிறைவு செய்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் யதார்த்தம் மண்வாசனைகளைக் கொண்ட கவிதைகளை விட இலட்சியப் போக்குள்ள கதைகளும் கவிதைப் பாங்கான கதைகளும் சிறப்பாக அமைந்து சிறந்த இலக்கியமாக மிளிர்வதையும் நாம் காணலாம்.

## புனை இலக்கியத்தின் கோட்பாடுகள்

இலக்கியம் என்பது மக்கள் வாழ்வைப் பிரதிபலிப்பதாகும் உலகப்பிரசித்தி பெற்ற இலக்கியங்கள் எல்லாம் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இன்று உருவாக்கப்படும் இலக்கியங்களும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. ஆனால் அறுபதுகளில் அல்லது அதற்கு முன் இலக்கியத்தில் மார்க்ஸிஸ் சிந்தனைகளைப் புகுத்தியவர்கள் பாட்டாளி மக்களைப்பற்றி எழுதுவதும் வர்க்க உணர்வுடன் எழுதுவதும் தான் சிறந்த இலக்கியம் என்ற கோட்பாட்டைப் புகுத்தினர். கோட்பாடுகளினால் குழப்பமடையாது இலக்கிய உணர்வுடன் நோக்கினால் மக்களைப் பற்றிக் கூறுவது இலக்கியம் என்றால் மக்களின் எல்லாப் பகுதியினரையும் அதாவது ஏழை பணக்காரன் உயர்வர்க்கம் நடுவர்க்கம் கீழ்வர்க்கம் உல்லாசபுரி வாசிகள் குடிசை வாசிகள் முதலிய எல்லா வர்க்கத்தினரையும் பற்றி புனைகதை இலக்கியம் உருவாகலாம். இதன் அடிப்படையில் மனித வாழ்வு, மனித

நேயம், சமூக மேம்பாடு ஆகியவையே இலக்கியத்தின் தொனிப் பொருளாக அமையும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்

தமிழ் புனைகதை இலக்கியத்தில் தமிழ் எழுத்தாளர்களும் சரி ஈழத்து எழுத்தாளர்களும் சரி தமிழ்ப் பண்புகளுக்கேற்ப, தமிழ் வாழ்க்கை முறைகளுக்கேற்ப எழுதுகின்றனர்.

## ஈழத்துப் புனைகதைகள்

தமிழக எழுத்தாளர்களுடன் போட்டி போடும் அளவுக்கு ஈழத்து எழுத்தாளர்களும் வளர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மணிக் கொடி காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிக் காலம் என்று ஒன்று உருவானது இதில் வரதர் (தி.ச.வராதராஜன்), இலங்கையர்கோன், சம்பந்தன் போன்றோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். இவர்கள் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய கால இறுதிப் பகுதியிலே சிறுகதை எழுத்துத் தொடங்கியது தி.ச.வரதராசன் அவர்கள் இன்று வரை வாழ்ந்து சிறுகதைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்துத் தமிழ் சிறுகதை அமைப்பினை சமுதாய சீர்திருத்தக் காலம் (1930 – 1949) முற்போக்குக் காலம் (1950 – 1960) புத்தெழுச்சிக் காலம் (1961 – 1983) தமிழ் தேசியவுணர்வுக் காலம் (1983 க்குப் பின்னர்) என நான்காக திரு.க.குணராசா அவர்கள் காலப்பகுப்பு செய்து எழுதியுள்ளார் அறுபதுகளில், எழுபதுகளில் மார்க்சிய சித்தாந்த எழுத்தாளர்களும், அச்சிந்தாந்தத்துக்கு எதிரான எழுத்தாளர்களும் சிறுகதைகள் படைத்தனர். இவற்றின் படைப்பாளிகளும் விமர்சகர்களும் தத்தம் சித்தாந்தங்களை வரித்துக் கொண்டு கருத்துக்களைக் கூறி வந்தனர். ஆக்க பூர்வமான நலன்களைக் கூறுவதிலும் அவற்றின் அவதூறான குறைகளைக் தேடுவதிலும் இரு அணியினரும் ஓயாது ஈடுபட்டனர். எவ்வாறாயினும் மாக்சிய எழுத்தாளர்கள் சிலர் தமது சிறுகதைகளில் சுலோகப் பிரயோகங்கள் செய்வதில்லை எனக் கூறிவிடமுடியாது அதே போல மறு சாரரில் சிலர் படு பிற்போக்குத்தனமான பத்திரிகைக் கதைகளை எழுதிச் சிறுகதைகளைப் பம்மாத்துச் செய்தனர் என மறுக்கவியலாது.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி குழவைச் சார்ந்த படைப்பாளிகளோடு ஈழத்துப் படைப்பாளிகளும் யாழ்ப்பாணத்து ஈழகேசரி இதழ் மூலம் சிறப்பான கதைகளை எழுதி வெளியிட்டமை இலக்கிய வாலாற்றில் கவனிக்கப்பட வேண்டியதொன்று ஏற்கனவே ஆனந்தவிகடன், கலைமகள் புதிய தமிழ் முழக்கத்தில் ஆசை கொண்டிருந்த ஈழத்தவர்களில் உயர் தரத் தமிழ்க் கல்வி கற்றுக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்களும், மற்றவர்களும் மணிக் கொடியின் தோற்றத்தினைத் தொடர்ந்து அந்த வழியில் புதிய வடிவம் பெற்ற ஈழகேசரியில் புதிய வகைச் சிறுகதைகளை எழுதினார்கள் இவர்களில் இலங்கையர் கோன் என்ற சிவஞானசுந்தரம், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோராவர்.

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றினைக் காலரீதியாகவும், சிறுகதை வடிவ ரீதியாகவும் ஆராய்ச்சிக்கு எடுக்கும் போது ஈழத்தின் சிறுகதை மூவர்களாகவும் முன்னோடிகளாகவும் மேற்கூறப்பட்டோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களைத் தவிர இவர்களைத் தொடர்ந்து சிறுகதையுலகில் பிரவேசித்து இப்புதிய இலக்கிய வகையைத் தெரிந்து சிறுகதை படைத்தவர்கள் சி.வி.வேலுப்பிள்ளை, அ.ந.கந்தசாமி, கை.செந்தில்நாதன், க.வே.நாவற்குழியூர் நடராஜன், இராஜ்.அரியரத்தினம், கே.கணேஸ், கசின், சொக்கன், சு.இராஜநாயகன், தாழையடி.சபாரத்தினம், கு.பெரியதம்பி போன்றோரையும் ஈழத்துச் சிறுகதையின் முன்னோடிகளாகக் கொள்ளலாம்.

ஈழத்துச் சிறுகதைகளில் தமிழ் தேசியவுணர்வுக் காலம் (1982 – 2000) ஒரு முக்கிய காலகட்டமாகக் காணப்படுகின்றது. 1970 களில் பிற்கூற்றிலிருந்து ஏற்பட்ட போர்ச்சூழல் உயிரழிவுகள், சொத்தழிவுகள், இடப் பெயர்வு, அகதி வாழ்க்கை, அவலங்கள் போன்றன காணப்பட்டன. ஏனவே இக்காலப்பகுதியில் சிறுகதைகளின் கரும் பொருளாக இவை அமைந்துள்ளன. இக்கால கட்டத்திலும் வரதர், எஸ்.பொன்னுத்துரை, செங்கையாழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், மு.பொன்னம்பலம், கோகிலா.மகேந்திரன், அராலியூர் சுந்தரம்பிள்ளை, தி.ஞானசேகரன், கே.ஆர்.டேவிட் தெணியான், மண்டூர்.அசோகா போன்றோரைக் குறிப்பிடலாம்.

அதே சமயம் இயல்பான இலக்கிய நோக்கில் புனைகதை எழுதுபவர்களும் புகழ்பெற்றனர் இவ்வகையில் செ.யோகநாதன், சொக்கன், உதயனன், எஸ்.பொன்னுத்துரை, நெல்லை க.பேரன், யாழ்ப்பாணம் தேவன், ஈழத்துச் சோமு, து.வைத்திலிங்கம், மு.தயாளசிங்கம், செங்கையாழியான், செம்பியன் செல்வன் தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.ராமையா, செந்தூரன், சாரல்நாடன் வ.அ.இராசரெத்தினம், அ.ஸ.அப்துல்ஸமது,மருதூர்க் கொத்தன், திக்வல்லைகமால் முல்லைமணி, உமாவரதராஜன், எஸ்.எப்.ஹனிபா, நவம், அருள் செல்வநாயகம், அன்புமணி, ரவிப்பிரியா, ஜுனைதா, ஷெரிப், வை.அகமது, ஜோன் ராஜன், செ.குணரத்தினம், பாலமனோகரன், அருள் சுப்பிரமணியம், தங்கன், ஆ.பொன்னுத்துரை, போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்களில் பலரது நாவல்கள் வீரகேசரி வெளியீடாக வந்துள்ளன.

ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையில் அன்னலட்சுமி ராஜதுரை (லஷ்சாயி) வள்ளிநாயகி (குறமகள்) பவானி, கவிதா, பாலேஸ்வரி, தமிழ்ப்பிரியா, தாமரைச்செல்வி, கோகிலா மகேந்திரன், மண்டூர்.அசோகா, ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், பத்மா சோமகாந்தன், நயிமாசித்தீக் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## விமர்சனம்

புனைகதை இலக்கியத்தை மிகவும் பாதிக்கின்ற ஒரு விடயம் விமர்சனம் ஆகும். புனைகதை விமர்சனங்களில் தமிழகத்தில் க.நா.சுப்பிரமணியம், வெ.சாமிநாதன், சிதம்பரரகுநாதன், சி.சு.செல்லப்பா, வல்லிக்கண்ணன் போன்ற பலர் பிரபல்யம் பெற்றுள்ளனர்.

ஈழத்தைப் பொறுத்த வரையில் கலாநிதி கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி, கலாநிதி மௌனகுரு, கலாநிதி எம்.ஏ.நு.ஃமான், சண்முகம் சிவலிங்கம், சே.எஸ்.சிவகுமாரன், எஸ்.பொன்னுத்துரை, எஸ்எல்.எம்.ஹனிபா போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் எந்த ஒரு விமர்சகர்களும் ஒத்துப் போவதில்லை பல விமர்சகர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வார். அந்த வகையில் கா.நா.சுப்பிரமணியம் - கே.கைலாசபதி, வெங்கட்சாமிநாதன் - எம்.ஏ.நு.ஃமான், எனப் பலகோடி விமர்சன யுத்த வீரர்களை நாம் பார்க்கிறோம். பல சந்தர்ப்பங்களில் இவர்கள் கோஷ்டிகளாக சேர்ந்தும் மோதிக் கொள்வார்கள்.
இம்மோதுகையில் முக்கியமான காரணங்கள் மூன்று

1. இவர்கள் வெவ்வேறு கோட்பாடுகளுக்குள் சிறைப்பட்டிருப்பது
2. இவர்களில் பலர் ஆக்க இயக்கத்திறன் அற்றவர்களாயிருப்பது.
3. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களினால் உந்தப்பட்டு விமர்சிப்பது.

விமர்சனத்தினால் இன்னும் ஒரு பெரிய ஆபத்தும் உள்ளது அதாவது ஒரு புனைகதையை இலக்கியப் படைப்பை ஆயிரமாயிரம் வாசகர்கள் விரும்பிப் படித்திருப்பார்கள். ஆனால் அது வெளியே தெரிய வராது. ஆனால் ஒரு விமர்சகர் அதற்கு மாறான தனது சொந்த அபிப்பிராயத்தை "விமர்சனம்" என்ற பெயரில் பத்திரிகையில் எழுதி விடுவார். ஆதை ஆயிரமாயிரம் வாசகர்கள் படிப்பார்கள். ஆக அந்தப் படைப்பு தரமில்லாதது என்ற மாயை ஏற்படும் மொத்தத்தில் இந்த விமர்சனம் என்பது புனைகதை இலக்கியம் படைக்க முடியாதவர்களால், தமது மன அரிப்பை தீர்த்துக் கொள்ள எழுதப்படும், ரசனைக் குறிப்பு என்பதும், இதனால் புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கு மிகப் பெரிய பயன் ஏதும் இல்லை என்பதும் வெளிப்படுகின்றது. மாறாக நேர்மையான நடுநிலை விமர்சனம், புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரியும் என்பதும் கண்கூடு.

## இலக்கியத் தரமான புனைகதைகள்

ஒரு புனைகதை இலக்கியத்தரம் உள்ளதா இல்லையா என்பதை எவ்வாறு அறியலாம்? அதற்கு அப்படைப்புகளை மூளையால் அணுகாது இதயத்தால் அணுக வேண்டும். டாக்டர்.மு.வரதராஜன் பின்வருமாறு கூறினார். ஒரு கட்டடத்தைப் பார்த்து "இது

30 அடி உயரமானது" என்றால் அறிவியல் ஆனால் அதை வானளாவியது என்றால் அது இலக்கியம்.

வாழ்க்கையிலிருந்தே இலக்கியம் உருவாகிறது. வாழ்க்கைக்கே அது பயன்படுகின்றது எனவே ஒரு சிறந்த இலக்கியப் படைப்பு வாழ்க்கையைப் பற்றி இதயத்தைத் தொடும் வகையில் ஏதாவது சொல்ல வேண்டும் அதைப் படித்து முடித்த பின்னரும் அது நெஞ்சில் நிழலாட வேண்டும், சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

அவ்வகையில் பார்த்தால், துப்பறியும் கதைகள், ஜனரஞ்சகக் கதைகள், கிளுகிளுப்புக் கதைகள், மாயா ஜாலக் கதைகள், தமாஷாக் கதைகள், முதலியன அடிபட்டுப் போய்விடும். ஏனைய கதைகளில் உயிர் துடிப்புள்ள கதைகள், மனிதாபி மானத்தைப் பேசும் கதைகள், மானிட நேயத்தை கூறும் கதைகள், மிகச்சுலபமாக இதயத்தில் இடம் பிடித்து விடும். அதிலும் அவ்வாறான கதைகள் பூடகமாக, கலைத்துவமாக, நவீனமாக, நயமாகக் கூறப்படும் போதும் உள்ளம் விகசித்து, மலர்ந்து உவகையடையும் அல்லது கடம்பிச் சாம்பி உருகிக் கண்ணீர் விடும்.

அத்தகைய கதைகள் நாம் ஏற்கனவே கூறியது போல் யதார்த்தப் படைப்பாக, இலட்சியப் படைப்பாக, உணர்வோட்டமாக, காவியப் படைப்பாக, கவிதைப் படைப்பாக ஏதாவது ஒரு வார்ப்பில் அமைந்திருக்கலாம். அத்தகைய கதைகள் கோட்பாடுகளுக்குள் சிக்காது, விமர்சனத்துக்குள் அகப்படாது வாசகனுடைய இதயத்தில் அந்தரங்கமாகச் சங்கமிக்கும் அவையே இலக்கியத்தரமான சிறந்த புனைகதைகள் ஆகும்.

## இலக்கியச் சஞ்சிகைகள்

புனைகதை இலக்கிய வளர்ச்சிக்குத் தற்கால சஞ்சிகைகள் பெரிதும் உதவுகின்றன. ஏராளமான இச் சஞ்சிகைகளை இலக்கிய ஏடுகள் என்றும் ஜனரஞ்சக ஏடுகள் என்றும் பொழுது போக்கு பொதுவாக வகைப்படுத்துவர். கல்கி, விகடன், குமுதம், குங்குமம், சாவி போன்ற mass circulation ஏடுகள் ஜனரஞ்சன ஏடுகள் இவற்றில் பொழுது போக்கு அம்சங்களும் சுவாரஸ்யமான கதைகளும் பெரும்பாலும் இடம்பெறும் அவ்வப்போது இலக்கியத்தரமான படைப்புக்களும் இவற்றில் இடம் பெறுவதுண்டு.

ஆனால் கலையாழி, தாமரை, தீபம், சுடமங்களா போன்ற சஞ்சிகைகள் இலக்கிய பிரக்ஞையுடன் வெளியிடப்படுவதால் இவற்றில் இலக்கியத்தரமான, சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம், முதலியன இடம் பெறும் இவற்றை இலக்கியச் சிற்றேடுகள் எனப் பொதுவாகக் குறிப்பிடுவார்கள். இவற்றுக்கு circulations (விநியோகம்) குறைவு வாசகர் குறைவு இக்காரணங்களால் இவை இடையில் நின்று விடுவதுமுண்டு இலங்கையிலும் இவ்வாறான இலக்கியச் சிற்றேடுகள் நிறைய வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் நீண்ட காலம் நிலைத்து நிற்பது "மல்லிகை" ஒன்று தான் கடந்த காலங்களில் அலை, கற்பகம், மலர், களம், படி வெளிவந்து மறைந்தன. இன்னும் பிரதேச ரீதியாக இவ்வாறான இலக்கியச் சிற்றேடுகள் அதிக அளவில் வந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுள்ளும் "முற்போக்கு" என முத்திரை குத்திக் கொண்டவை ஒரு குறிப்பிட்ட வட்டத்தினரை அதாவது முற்போக்கு வட்டத்தினரை முதன்மைப்படுத்தி கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றை வெளியிடுவதால், இவற்றின் பிரசார நெடி சற்றுத் தூக்கலாகவே தென்படும் .

## இலக்கியப் படைப்புக்கள்.

தற்காலப் புனைகதை இலக்கிய வளர்ச்சியில் நூல் வெளியீடுகளும் பெரும் பங்கு வகிக்கின்றன துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் தமிழ் நூற் பதிப்பகங்களும் வெளியீட்டகங்களும் மிகக் குறைவாகவே உள்ளன அதனால் இலக்கியத்தரமான புனைகதைகள் நாவல்கள் அச்சில் வெளிவராமல் ஏட்டுப் பிரதிகளாக முடங்கிக் கிடக்கின்றன. இங்கு எழுத்தாளர்களே தமது நூல்களை வெளியிட்டு தாங்களே விற்பனை செய்து தாங்களே நஷ்டப்பட்டு குடுகெண்ட பூனையாக அடங்கிவிடுகிறார்கள்.

தமிழகத்தில் ஏராளமான பதிப்பகங்களும் வெளியீட்டகங்களும் உள்ளன அங்கு நூல் வெளியீடு ஒரு லாபம் தரும் தொழிலாகவே செயற்படுகின்றது. அவற்றுள்ளும் க்ரியா நர்மதா, அன்னம் சென்னைபுக்ஸ், காந்தளகம் போன்ற நிறுவனங்கள் ஓரளவு இலக்கியத்தரமான நாவல், சிறுகதைகளை வெளியிடுகின்றன. தற்போது இலங்கை எழுத்தாளர்கள் பலரது நூல்கள் தமிழகத்தில் வெளிவருகின்றன. இவ்வாறே புலம் பெயர்ந்த பல எழுத்தாளர்களது நூல்களும் வெளிவருகின்றன.

இவற்றில் தொனிக்கும் ஒரு பொதுப் பண்பு மனங்கொள்ளத்தக்கது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதை வரலாற்றில் நாம் பார்க்கின்றோம். அதற்கேற்ப கடந்த இரு தசாப்தங்களில் வெளிவந்த இலங்கை எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைகள் இன்று தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்ற முக்கிய பிரச்சினை இனப் பிரச்சினை. அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியதாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஏனவே சமூகப் பிரச்சினைகளுடன் மக்கள் பிரச்சினைகளுடன் தொடர்புறும் படைப்புகளே சிறந்த இலக்கியங்களாக அமைவதைப் பார்க்கிறோம். அந்த வகையில் புனைகதை இலக்கியங்களை நாம் மனதிற் கொள்ளலாம்.

உசாத்துணை நூல்கள்:- சிறுகதை வளர்ச்சி – துறை மனோகரன்
ஈழத்து சிறுகதை வளர்ச்சி – க.குணராசா
மருதநிலா

ஆசிரியை
திருமதி:-ம.மகேசன்

## துணுக்கு

அனைவரும் சமம் எல்லோரும் வாழப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் மனிதப் பண்போடு நடந்து கொண்டால்தான் சமுதாயமின்புற்று வாழ முடியும் என்பன போன்ற அடிப்படைக் கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் ஆழமாக்கப் பதிய வைக்க வேண்டும். நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும், இனப்பற்றையும், ஊட்டுவனவாக அமைதல் வேண்டும். பொது மக்களின் நல்ல அறிவு, நல்ல ஒழுக்கம், நல்ல வாழ்க்கை, இவற்றை வளர்க்கும் முறையில் எழுத்தாளர் படைப்புக்கள் இருத்தல் வேண்டும்.

-மா.இராசமாணிக்கனார்

# பச்சை வீட்டு விளைவும் பூகோள வெப்பமாதலும்

புவிக் கோள மாசடைதல் நடவடிக்கைகளில் பச்சை வீட்டுத் தாக்கமும் ஒன்றாகும். பச்சை வீட்டுத் தாக்கமானது பூமி அதிகளவில் வெப்பமடைவதனால் நிகழ்கின்றது. இத்தாக்கம் பற்றி முதன் முதலில் 1827ல் "BARON JEAN BASTISTE FAURINER" என்பவரால் விபரிக்கப்பட்டது. இத்தாக்கமானது புவியை வெப்பமாக்கும் காபனீரொட்சைட், மெதேன், நைதரசன் ஒட்சைட், ஓசோன், நீராவி, குளோரோ புளோரோ காபன் போன்ற வாயுக்களின் பொறிமுறைச் செயற்பாடாகக் காணப்படுகின்றது. சீரற்ற காலநிலை நிலவும் குளிர்ப் பிரதேசங்களில் தாவரங்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கண்ணாடியினாலான மூடிய அமைப்பு முறையே பச்சை வீடு என அழைக்கப்படுகின்றது. ஞாயிற்றிலிருந்து பெறப்படும் கதிர் வீச்சு வளி மண்டலத்தினை ஊடறுத்து புவி மேற்பரப்பை அடைகின்றது இவ்வாறு புவி மேற்பரப்பை அடையும் வளிமண்டலக் கதிர் வீசலானது உறிஞ்சல், சிதறல், தெறித்தல் போன்ற செயன் முறைகளுக்கு உட்பட்டு சமுத்திரம், நிலம், தாவரப் போர்வை என்பனவற்றை வெப்பமாக்குகிறது. பெறப்படும் வெப்ப நெட்டலைக் கதிர் வீச்சாக புவியிலிருந்து மீண்டும் திருப்பி அனுப்பப்படுகின்றது. இதில் பெருமளவான பகுதி வளிமண்டலத்தினால் உறிஞ்சப்பட மிகுதி வானவெளிக்கு அனுப்பப்படுகிறது. ஒரு பகுதி மீள் கதிர் வீச்சாக புவிக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. உள்வரும் வெளிச் செல்லும் சக்தியானது வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட், மெதேன், நைதரசன் ஒட்சைட், குளோரோ புளோரோ காபன், நீராவி போன்றவற்றினால் உறிஞ்சப்படும் செயற்பாடு பச்சை வீட்டு விளைவாகும். இப் பச்சை வீட்டு விளைவினால் குளிர்ச்சியாக இருக்க வேண்டிய எமது பூமியின் வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. புவியின் சராசரி வெப்பநிலை 2025ம் ஆண்டளவில் 1°C யாலும் 2100ம் ஆண்டுக்கு முன் 3°C யாலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பூமியின் வெப்பநிலை அதிகரித்தால் பூமிக்கும் அதிலுள்ள சகல அம்சங்களுக்கும் பல்வேறுபட்ட பாதகமான விளைவுகள் ஏற்படும். அவையாவன,

1. காலநிலை மாற்றம்:- அயனமண்டலப் பிரதேசங்களில் மாரிகாலம் குறுகியதாகவும், சூழலானது இளஞ் சூடானதாகவும் காணப்படும். உப அயனப் பகுதிகளில் கோடை காலம் நீண்டதாகவும் வரட்சியானதாகவும் மாறும்.
2. மழைவீழ்ச்சிப் போக்கில் மாற்றங்கள் ஏற்படும். இதனால் பிரதான தானிய உற்பத்திப் பகுதிகள் பாதிக்கப்படும். அதிக நிலப்பரப்புகள் பாலைவனமாக மாறும், மண்ணரிப்பு ஏற்படும்.
3. வானிலை மாற்றங்களினால் தற்போதுள்ள காடுகள் அழிவுக்குள்ளாகும். போஷாக்கின் செயற்பாட்டினைக் காபன் கட்டுப்படுத்தும். ஒளித்தொகுப்பின் போது காபனீரொட்சைட் ஊடுருவும் இலைகளின் துவாரங்கள் அடைபடும். இதனால் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும்.
4. வெள்ளப் பெருக்கு, வரட்சி, பனி, வெப்பத்தாக்கம், காட்டுத் தீ, என்பன ஏற்படும். இதனால் வளமான நிலம் தரமிழக்கும்.
5. நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் பாதிக்கப்படுவதனால் நீர் மின்சக்தி குறைவடையும் நிலை ஏற்படும்.
6. அயனப் பகுதிகளிலும், உப அயனப் பகுதிகளிலும் மழை வீழ்ச்சிப் பாங்குகளில் பிரதேச ரீதியாக மாற்றங்கள் ஏற்படுவதனால் சர்வதேச உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். இவற்றில் சீனா, பேரு, பிரேசில், தென்கிழக்காசியா, ஆபிரிக்காவின் 'சாகெல்' பிரதேசம் என்பன குறிப்பிடத்தக்கவை.
7. முனைவுப் பகுதிகளிலுள்ள பனிப்படலங்கள் உருகுவதனால் கடல் நீர்மட்டம் உயரும், இதனால் வெள்ளப் பெருக்கு ஏற்படும் கடலையடுத்த பகுதிகளில் கடல் நீர் உட்புகுவதனால் விவசாய நிலங்கள் உவரடைதலினால் பாதிக்கப்படும்.
8. நதிகளின் நீரினளவு அதிகரிக்கும் . அதனால் நதிகளின் வேகம் அதிகரிப்பதுடன் வெள்ளப்பெருக்கு, நிலவழுக்குகைகள் என்பன ஏற்படும். கம்பூச்சியா வியட்னாமின் மீக்கொங் கழிமுகம், நைல் கழிமுகம், வங்களாதேஷின் கங்கை-பிரமபுத்திரா மெக்னாக் கழிமுகம், மிசிசிப்பி ஆகிய பகுதிகளில் அதிக சனத்தொகை காணப்படுகின்றது. நதிகளில் நீரின் அளவு அதிகரிக்கும் போது பெருமளவு மக்கள் பாதிப்படைவர்.

9. மலேரியா, யானைக்கால் நோய், போன்ற நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். ஓட்டுண்ணிகள், வைரஸ், பக்ரீரியாக்களின் பரம்பல்கள் மாற்றியமைக்கப்படும். மனித உணர்வுகளில் மாற்றம் ஏற்படுவதுடன் சரும நோய்களும் உருவாகும்.

## புவி வெப்பமடைதலைத் தடுத்துக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்.

1. காடழிப்பைக் கட்டுப்படுத்துவதுடன் காடாக்க நடவடிக்கைகள் காடுகள் எரிதலைத் தடுத்தல் போன்றன மூலம் பச்சைவீட்டு வாயுக்களின் உற்பத்தியைக் குறைத்தல்.
2. அதிகரித்துச் செல்கின்ற வளிமண்டல காபனீரொட்சைட்டின் காலநிலை விளைவுகள் பற்றி மிகவும் செம்மையான எதிர்வு கூறல்கள் உலக ரீதியான வளிமண்டலவியல் தரவுகளின் அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

   I) கணனி அடிப்படையிலான மாதிரியுருக்கள்
   II) செய்மதிகள் மூலமான கண்காணிப்பு
   III) மேற்பரப்பு அடிப்படையிலான நடவடிக்கைகள்

3. காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற சூழற்தொகுதி பாதிப்புக்கள் பொருளாதார சமூக, அரசியல் தாக்கங்கள் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினராலும் தெரிந்து கொள்ளப்பட வேண்டும். வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிகரித்து வருகின்ற காபனீரொட்சைட்டின் மட்டத்தின் பாதகமான விளைவுகள் பற்றி எல்லோரும் அறியத்தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. புதிய வகை இயந்திரங்கள், வாகனங்கள் என்பனவற்றை உருவாக்கி பச்சைவீட்டு வாயுக்களின் உற்பத்தியைக் குறைத்தல்.
5. C.F.C உற்பத்திகளைத் தடை செய்தல்.
6. பச்சைவீட்டு வாயுக்களைத் தயாரிக்கும் புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்காது கட்டுப்படுத்துதல். உ-ம்:- மரத்தொழில், நிலக்கரி அகழ்தல்
7. உயிர்ச்சுவட்டு எரி பொருட்களின் பாவனையைக் குறைப்பதற்கு அதிகளவு வரியை அவற்றைப் பாதிப்போருக்கு எதிராக நடைமுறைப்படுத்துதல்.
8. புதிய வலுப்பிறக்கும் மூலங்களான சூரிய சக்திப் பாவனை, காற்றாடிப் பாவனை, நில வெப்பப் பாவனை போன்றவற்றை பாவிப்போருக்கு அரசாங்கம் மானியம் வழங்குதல்.
9. சனத்தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல்
10. கல்வி மூலமாகவும், வேறு வழிகள் மூலமாகவும் புவியின் வெப்ப அதிகரிப்பு பற்றி மக்களுக்கு உணர்த்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளைக் கையாளுவதன் மூலம் புவி வெப்பமடைதலைக் குறைக்கவோ அன்றி தடுக்கவோ முடியும்.

உலகளாவிய வெப்பமடைதலைத் தவிர்க்கும் பொருட்டு 1997 டிசம்பர் மாதம் யப்பானில் கியட்டோ நகரில் உச்சி மாகா நாடொன்று நடைபெற்றது. இம் மாகாநாட்டில் வளர்ந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையில் பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றுதல், தடுத்தல் ஆகிய விடயங்களில் கருத்து முரண்பாடுகளும், வாதங்களும் ஏற்பட்டன. இம்மாகாநாட்டில் 1990ம் ஆண்டு வெளியேற்றப்பட்ட பச்சைவீட்டு வாயுக்களின் அளவில் 5% அளவு 2012ல் குறைக்கப்பட வேண்டுமென எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் இந்நிலை ஏற்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

ஆசிரியை
திருமதி ரோ.பரம்சோதி

சிறுகதை

# அவன் ஒரு மெழுகுவர்த்தி ஆகின்றான்...

முன்னிரவு பத்து மணி எழில் கொஞ்சும் சாவகச்சேரி நகரம் அமைதியை வருக வருக என்ற வருவழைத்துக் கொண்டிருந்தது. ஆம் இவ்வேளையில் ஒரு காலத்தில் இந் நகரம் எல்லோருடைய கண்ணுக்கும் தந்து கொண்டிருந்த காட்சி ஒவ்வொருவருடைய கண்ணையும் கொள்ளை கொண்டது என்பதில் சந்தேகம் இல்லை.

எழில் கொஞ்சும் வயல்வெளிகள் ஒருபுறம், வானத்தை தொட்டு நிற்கும் போல் காட்சி தரும். கடல் மறுபுறம், அந்நகரை அலங்கரிக்கும் கோயில்கள், பாடசாலைகள், நூலகம், பெரிய கட்டடங்கள் என்பன இன்னோர் புறமாக அமைந்து அந்நகரை அலங்கரித்தன. ஆனால் இன்று அந்த நகரத்தினைக் காணும் போது நெஞ்சு ஒரு நொடி கனக்கின்றது. ஆம் இந் நகரப்பகுதியிலே அமைந்திருந்த "கோயிற் குடியிருப்பு" என்ற கிராமம் இருளில் மூழ்கி அமைதியாக இருந்தது. ஆங்காங்கு பத்துப் பதினைந்து குடிசைகள்! எல்லாமே இருளுக்கு அடிமையாகி விட்ட வேளையிலும் ஒரு குடிசையில் மட்டும் ஒரு சிறிய குப்பி விளக்கு தன்னால் இயன்றளவு ஒளியை அச்சூழலில் பரப்பிக்கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்திலே ஐம்பது வயது மதிக்கத்தக்க தாயொருத்தி பைகள் ஒட்டிக்கொண்டிருந்தாள். இருபது வயது மதிக்கத்தக்க ஓர் இளம் பெண் தாயொட்டும் பைகளை வாங்கி அடிக்கிக் கொண்டிருந்தாள். ஆமாம் அந்தப் பெண்ணின் பெயர்தான் அபிரா. அவள் தாயின் பெயர் செல்லம்மா அபிராவுக்கு அளவில்லாத அழகை கொடுத்திருந்தான் ஆண்டவன். அதுமட்டுமா, நல்ல அறிவையும் நற்குணத்தையும் கொடுத்திருந்தான். இத்தனையும் கொடுத்த இறைவன் அவளிடத்தில் ஒரு பெரிய குறையை வைத்துப் படைத்துவிட்டான். ஆமாம் அவள் பிறந்ததிலிருந்தே இருண்ட உலகத்தை தான் பார்க்கின்றாள்.

தன்னிச்சையாக பைகளை அடுக்கிக்கொண்டிருந்த அபிரா திடீரென தனது தாயிடம் "அம்மா! ஏனம்மா அழுகுறீங்க?" என்று கேட்டாள். தாய் அழுதுகொண்டிருக்கின்றாள். என்பதை பைகளிலிருந்த ஈரத்தைக் கொண்டுதான் கண்டு பிடித்தாள். அழுதுகொண்டிருந்த செல்லம்மா தான் அழுவதை மகள் அறிந்துவிட்டாள் என்பதை அறிந்து "நான் அளவில்லை அம்மா" என்று கூறித்தன் உள்ளக்குமுறலை அடக்கமுயன்றாள். ஆனால் அந்த விவேகம் படைத்த அபிரா சும்மா விடுவாளா. "இல்லையம்மா நீங்கள் அழுகிறீங்க ஏன்? என்று சொல்லம்மா" என்று வற்புறுத்தினாள்.

"அபிரா! இவ்வளவு நாளும் மறந்திருந்த அந்த உண்மையை இன்று சொல்கிறேன் அம்மா சுமார் 12 வருடங்களுக்கு முன் அப்பொழுது உனக்கு வயது எட்டு உனது தம்பி ஆதித்தனுக்கு ஆறு வயது இருக்கும் உன் அப்பா மாட்டு வண்டியிலே பிரயாணிகளை ஏற்றி இறக்குவதை தொழிலாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் வழமை போல் தனது மாட்டுவண்டியுடன் சென்றவர் லொறி ஒன்றுடன் மோதுண்டதைக் கேள்விப்பட்ட நான் அவ்விடத்தை நோக்கி ஓடினேன். அங்கே உன் அப்பா இரத்தவெள்ளத்திலே கிடந்தார். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக என் அண்ணன் செல்லையாவிடம் உதவிக்கரம் கேட்டு ஓடினேன். அவர் தன்னால் எதுவும் செய்ய முடியாது என கைவிரித்து விட்டார். யாருமே அந்த வேளையில் உதவ முன்வரவில்லை. திரும்பவும் அப்பாவிடம் ஓடினேன் அவர் குற்றுயிராகக் கிடந்தார். அவரை மடியிலே வைத்துக்கொண்டு கதறியழுதேன். உன் அப்பா அந்த உயிர்போகும் வேளையிலே என்ன சொன்னார் தெரியுமா, செல்லம்! இரண்டு செல்வங்களையும் எப்படியாவது காப்பாற்றம்மா அபிராவுக்கு ஒரு நல்ல துணைவனை தேடிக்கொடுத்திடம்மா என்று கூறியவர் மறுகணமே உயிர் நீத்தார்."

என்று கூறிய செல்லம்மா ஒரு பெருமூச்சு விட்டாள். "ஆமம்மா உன்னை ஒரு நல்லவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றுதான் சிந்திக்கின்றேன்" இத்தனையையும் கேட்டுக்கொண்டிருந்த அபிரா தன் இருண்ட கண்களில் இருந்து கண்ணீரை சிந்தத்தான் செய்தாள். இவ்வளவையும் கேட்டுக்கொண்டு படுத்திருந்த ஆதித்தனின் கண்கள் குளமாயின, அந்தக் குளத்திலிருந்து கண்ணீர் வழிந்து அவன் படுத்திருந்த பாய் இடுக்குகளிலே தேங்கி நின்றது. எப்படியோ அன்றிரவு மறைந்து அடுத்த நாள் விடிந்தது. தாய் செல்லம் பக்கத்து தோட்டத்திற்கு வேலைக்குச் சென்றுவிட்டாள். தன் தம்பி

ஆதித்தனின் முகத்தை பார்ப்பதற்கு அபிராவுக்கு ஆவலாக இருந்தாலும் கூட அது முடியாத காரியமாயிற்று. ஆதித்தன் தான் செல்வதாகக் கூறி பாடசாலையை நோக்கி நடந்தான் ஆனால் அவன் நினைவுகள் மட்டும் தன் அக்காவின் திருமணத்தைப் பற்றியதாகவே இருந்தது. எப்படியோ பாடசாலையை அடைந்து விட்டான் அவன் போவதற்கும் அவனது செல்லையா மாமனின் ரகு அவனை பார்த்து ஒரு ஆணவச் சிரிப்பினை உதிர்க்கவும் சரியாக இருந்தது.

ரகு ஆதித்தனிடம் மிகவும் கண்டிப்பாகவும் வெறுப்பாகவும் பழகுவான் ரகு சிரிக்கும் போது ஆதித்தன் தன் அக்காவின் திருமண நினைவுகள் தான் முன் வந்தது. "ரகு இன்று உன்னிடம் ஒரு விடயம் கேட்கட்டுமா?" "கேளேன்" வெறுப்பாகப் பதில் கூறினான். அவனருகில் சென்ற ஆதித்தன் "என் அக்காவை திருமணம் செய்து கொள்கிறாயாடா". என தான் நினைத்ததை ஆதித்தன் திடீரெனக் கேட்டுவிட்டான். இதைக் கேட்ட ரகுவின் கண்கள் அனல் கக்கத் தயாராகின. முகம் இருண்டு கன்னங்கரேவென்று மாறியது. அவன் வாயிலிருந்து வார்த்தைகள் கனலாக தெறித்து வெளிவந்தன. "அடே துரோகி என்னடா சொன்னாய்? குருட்டுப் பிணத்தை மணந்து கொள்ளச் சொல்லுகிறாயா? என்ன துணிவடா உனக்கு?" என்று கூறியவன் மறுகணமே ஆதித்தனைப் பயங்கரமாகத் தாக்கத் தொடங்கினான்.

இக்காட்சியை கண்ட ஆதித்தனின் நண்பன் ரமணா அவ்விடத்தை நோக்கி ஓடினான். அவன் கால்கள் இருக்கவேண்டிய இடத்தில் இரண்டு கைத்தடிகள் தான் இருந்தன. ஆம். அவன் ஒரு கால் ஊனமுற்றவன் அவனது ஒரு கால் இயங்கவே மாட்டாது. "ரகு அடித்தது போதும் ஆதித்தனை விடடா. எனக்காக விடடா" என்று கூறி ரமணா ரகுவை கட்டியணைத்தான். அந்தப் பாவி ரகு காலினால் ரமணாவை உதைத்தான். ஒய்வில்லை "அந்தக் குருட்டுப்பிணத்தை எனக்கா......" அவனிடம் வார்த்தைகள் தடுமாறின. ரகு வகுப்பறையை நோக்கி நடந்தான். தட்டுத்தடுமாறி ரமணா எழுந்து ஆதித்தனின் அருகில் சென்றான். ஆதித்தனின் தலையிலிருந்து இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது காயத்திற்கு முதலுதவிகளை மேற்கொண்ட ரமணா மனதிலே "குருட்டுப் பிணம்" என்ற வார்த்தை நிழலாடிக் கொண்டிருந்தது. எப்படியோ அன்றைய பாடசாலை முடிந்து வெளியே வந்தார்கள்.

ஆதித்தனின் தலையில் போடப்பட்டிருந்த கட்டு அவனுக்கு பரிதாபக் காட்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அவனருகே வந்திருந்த ரமணா ஆதித்தனைப் பரிதாபமாய்ப் பார்த்தான். ஆதித்தனின் கண்கள் நன்றி உணர்வோடு ரமணாவைப் பார்த்தன. "ஆதித்தன் ரகு ஏதோ குருட்டுப்பிணம் என்று ஏசினானே யாரை?" "என் அக்காவைத்தான்" "என்ன உன் அக்காவிற்கு கண்கள் தெரியாதா?" "ஆமாண்டா ரமணா. என் அக்கா பிறவிக் குருடுதானடா. ஏன் இந்த இறைவன் ஏழைகளிடம் தான் தன் விளையாட்டைக் காட்டுகிறான்? இதனைக் கூறும் போது ஆதித்தனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அக்கண்ணீரை தன் அன்புக் கரங்களால் துடைத்து விட்டான் ரமணா. இருவரும் பிரிந்து செல்லும் இடமான அந்த முருகன் ஆலயம் நெருங்கி விட்டது. "ஆதித்தன் போயிற்று வாரண்டா" என்று கூறிய ரமணா தன்னிச்சையாக தன் நடை பாதையில் நடந்து சென்றான். அவனது நினைவனைத்தும் குருட்டுப் பிணம் என்ற வார்த்தையில் தான் நிலைத்து விட்டது. ஆதித்தனுக்கு ஓர் அக்கா இருப்பதாக அவனுக்கு தெரிந்தாலும் அவள் குருடு என்பது அவனுக்கு இன்று தான் தெரியும். அவன் இந்த சமுதாய சாக்கடையைப் பார்த்துச் சிரித்தான். பணமற்ற ஏழைகளைத் தான் இந்த சமுதாயம் வெறுக்கின்றதா? இல்லை. இயற்கையிலே பாதிக்கப்பட்ட ஊனர்களையும் வெறுக்கின்றது. இது என்ன சமுதாயம் ! என்ன போலிக் கௌரவம் ! அவன் தனக்குள்ளே சிரித்தான். ரகு ஏன் ஆதித்தனுக்கு அடித்தான்! என்ற விடயம் இப்பொழுது தான் அவனுக்கு மெல்லப் புரிந்தது. அவனை அறியாமலே அபிராவின் மேல் ஒரு பரிவு ஏற்பட்டது. அவன் விரத்தியுடனேயே நடந்தான்.

தனது மகன் தலையிலே கட்டுடன் வருவதை கண்ட செல்லம்மாவின் கண்கள் கலங்கின. தகப்பனை இளமையிலேயே இழந்த பிள்ளைகளை இவ்வளவு நாளும் தான் எவ்வளவு கஸ்ரங்களுக்கிடையில் வளர்த்தேன். என்று நினைக்கும் போது அவளுக்கே வியப்பாக இருந்தது. இரவும் பகலும் அவள் ஓயாது உழைத்தாள். அயராது பாடுபட்டாள். அவளின் உடம்பு ஆண் பிள்ளை போன்றுதான் காட்சி கொடுக்கும். அவ்வளவிற்கு முறுக்கேறி

இருந்தது. இப்பொழுது ஓரளவு ஓய்வு. மகள் அபிராவின் கையுதவிகள் அவளுக்குக் கிடைத்தன.

செல்லம்மா "ஆதித்தன்" என்று அமைதியாக அழைத்தாள். "என்னம்மா?" அவனும் அமைதியாக பதில் கொடுத்தான் "என்னடா தலையில் நடந்தது?" பாடசாலையில் விளையாடும் போது விழுந்து விட்டேன் அம்மா என்று கூறிச் சமாளித்தான். அடுத்தநாட்காலை அமைதியாக விடிந்தது. ஆதித்தன் பாடசாலை நோக்கி நடந்தான் கோயிலடியில் ரமணா தனக்காக காத்துக் கொண்டிருப்பான் என நினைத்து விரைவாக நடந்தான். கோயிலடியை அண்மிக்கும் போது காற்றலைகளிலே மிதந்து வந்த அந்த ஒலி இனிமையைக் கொடுத்தது.

"முருகா ஏழைகளின் துயர் நீக்கும் குமரா எனது நண்பனின் அக்காவின் கண்களுக்கு பார்வையைக் கொடப்பா அந்த அபிராவுடைய கண்களுக்கு......." இதைக் கேட்ட ஆதித்தனின் கண்கள் ஆனந்தத்தால் அகல விரிந்தன. இப்படி எனக்கொரு நண்பனா? இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே என்று தனக்குள் பெருமிதம் கொண்டான் ஆதித்தன் "ரமணா" என்ற குரல் கேட்டு தலையைத் திருப்பினான் ரமணா. ஆதித்தன் வந்திட்டியா? "ஆமாண்டா ரமணா பாடசாலைக்கு நேரமாச்சு வாடா போவோம்." இருவரும் எதுவும் பேசாமல் நடந்து கொண்டிருந்தனர்.

நாட்கள் உருண்டோடின. ஆதித்தன் இப்பொழுது ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையும் முடித்துவிட்டு முடிவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான். இப்பொழுது பாடசாலைக்கும் போவதில்லை அன்று திங்கட்கிழமை காலை நித்திரை விட்டு எழுந்த ஆதித்தன் எங்கேயோ போக ஆயத்தமாகும் வேளையில் "தம்பி! தம்பி! எனக்குப் பார்வை தெரியுதடா என் கண்கள் ஒளி பெற்று விட்டதடா" என்று கூறி ஓடி வந்தாள் அபிரா. இதைக் கேட்ட ஆதித்தன் கண் முன்னே காட்சி கொடுத்தது ரமணாவின் உருவம் தான்! என்ன உனது கண் தெரியுதா? அக்கா. "ஆமாண்டா ஆதித்தன் என் கன்கள் நன்றாக தெரியுது". உள்ளே இருந்த தாய் இதைக் கேட்டதும் ஓடி வந்து அபிராவை கட்டியணைத்தாள். ஆனால் ஆதித்தனோ முருகன் ஆலயத்தை நோக்கி ஓடினான். இந்த நல்ல செய்தியை ரமணாவுக்கு சொல்லி விட வேண்டும் என்ற ஆவல். அவன் கோயிலை நெருங்கும் போது அவனையே அவனால் நம்ப முடியவில்லை. என்ன ஆச்சரியம் ரமணா கோயில் முன் நின்று எதையோ வேண்டிக் கொண்டு நின்றான். அவன் எதை வேண்டுகின்றான்? "முருகா! அபிராவுக்கு கண்கள் தெரியும் படியாக உதவி செய்ய மாட்டாயா? இது தான் நான் உன்னிடம் வேண்டும் இறுதி நாள். அபிராவுக்கு பார்வை கிடைக்காமல் விட்டால் உனது காலடியிலேயே செத்து மடிகிறேன்" என்று கூறியவன் முருகனின் காலடியிலே சடாரென விழுந்தான். ரமணா! மண்டபம் அதிரும் படியாகக் கத்தினான் ஆதித்தன் அவன் முகத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஆதித்தன் ஓடிச்சென்று ரமணாவைத் தூக்கி எடுத்தான். "ரமணா என் அக்காவுக்கு கண் பார்வை தெரியுதடா. என் அக்காவுக்கு கண் கொடுத்த தெய்வம் நீதாண்டா உன்னை என்றுமே நான் மறக்க மாட்டேன்டா." ஆதித்தன் கண்கள் நன்றி உணர்வுடன் நண்பனை நோக்கின. ஆதித்தன் என்ன அபிராவுக்கு கண் தெரியுதா? உண்மையாகவா? "ஆமாண்டா ரமணா உண்மையாகத்தான்." "முருகா! இப்பதாண்டா என் முருகன்." ரமணாவின் கைகளைப் பற்றிப்பிடித்து ஆதித்தன் அவனையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். "ஆதித்தன் அன்று ரகு உன் அக்காவை குருட்டுப் பிணம் என்று ஏசினானே அன்றே என் மனதில் உன் அக்காவின் கண்கள் பார்வை பெற வேண்டும் என்று ஆசைப்பட்டேன் முருகனை உருகி வேண்டினேன். அவன் இன்று தான் அருள் புரிந்திருக்கின்றான்" ரமணாவின் அன்பான வார்த்தைகள் ஆதித்தனுக்கு தேனாக இனித்தது.

ரமணாவின் நற்குணத்தை எப்படிப் போற்றுவதென்று அவனுக்குப் புரியவில்லை. ஆதித்தன் ரமணாவை உற்று நோக்கினான். அவன் ரமணாவைப் பாத்துக் கேட்டான் "ரமணா நீயே என் அக்காவை மணந்து கொள்கிறாயா?" இது ரமணா எதிர் பார்க்காத ஒன்று அந்த கேள்விக்கு மௌனம் தான் ரமணாவின் விடையாக இருந்தது. மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று நினைத்து அமைதியாக நடந்தான் ஆதித்தன். ரமணா மிக அழகாக இருந்தாலும் கூட அவன் ஒரு கால் ஊனமுற்றவன். இவனை மணமகனாக யார் தான்

ஏற்பார்கள் அதைத்தான் சொல்ல நினைத்தான் ஆதித்தனிடம். ஆனால் அதை அவன் விரும்பவில்லை. பேசாமலேயே நடந்தான்.

தூரத்தே தனது மகனும் ஒரு நொண்டியும் வருவதைக் கண்ட செல்லம்மா முதலில் ஆச்சரியம் அடைந்தாலும் பின்பு அது மகனின் நண்பனாக இருக்கலாம் என நினைத்து சமாளித்துக் கொண்டாள். வீட்டுக்குள் நுழைந்து இருவரையும் கண்ட அபிரா "தம்பி, இவர் யார்? தம்பி" என்று ஆவலுடன் கேட்டாள். அக்கா இவர் தான் உன் கணவராக வரப் போகின்றவர். பெயர் ரமணா. இதைக் கேட்ட அபிரா அதிர்ச்சி அடையவில்லை. ஆனால் தாய் செல்லம்மாவோ "என்னடா சொன்னாய் இவன் என் வீட்டு மருமகனா. இந்த நொண்டியை என் மகளுக்கு கட்டிக் கொடுத்து இத்தனை காலமும் இருண்டு கிடந்த என் மகளின் வாழ்க்கையை இனியும் இருள் செய்ய நீயா விரும்புகிறாய்? துரோகி. நீ எனக்கொரு மகனாடா" வார்த்தைகளை மளமளவெனக் கொட்டித் தீர்த்தாள் செல்லம்மா. ரமணா தலை குனிந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தான். ஆதித்தனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் இப்போது கோபத்துடன் பேசுகிறான்.......... "நான் ஒரு நாள் தலையில் கட்டுடன் வந்து விழுந்து விட்டேன் என்று கூறினேன் உண்மை எதுவெனத் தெரியுமா? செல்லையா மாமாவின் ரகுவிடம் கேட்டேன் என் அக்காவை மணம் செய்கிறாயா? என்று அதற்குத்தான் அம்மா என்னைத் தாக்கி என் மண்டையை உடைத்தான். அப்பொழுது என்னைக் காப்பாற்றி எனக்கு உதவி செய்தவன் இந்தப் பாவி தான் அம்மா. அவன் என் அக்காவை குருட்டுப் பிணம் என்றெல்லாம் ஏசினான். அப்பொழுது என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் தெரியுமா? அக்காவின் பார்வை தெரியக் காரணம் இந்த நொண்டி தானம்மா. ஆனால் அவனுடைய உள்ளம் நிமிர்ந்த அன்பான பாசமுள்ள உள்ளமம்மா. என் அக்காவை இந்த ரமணாவுக்கே மணம் செய்து கொடம்மா நானே இவர்கள் வாழ்வை பிரகாசிக்க செய்கிறேன். அம்மா என் உயிர் உடலை விட்டுப் போகும் வரை என்னை வருத்தி இவர்களுக்காகவே உழைக்கின்றேன் அம்மா. இது சத்தியம். என் தாய் மீது சத்தியம்."

இத்தனையும் கேட்ட தாய் அமைதியாக ரமணாவை நோக்கினாள். அபிராவின் கண்களோ ரமணாவின் கண்களோ ரமணா மீதிருந்து விலக முடியாமல் தவித்தன. அந்த அமைதியான சூழ்நிலையைக் குழப்பிக் கொண்டு தபாற்காரனின் மணி ஒலித்தது. ஆதித்தனின் கால்கள் தபாற்காரனை நோக்கி நடந்தன. ஆம்...... அவனுக்கு ஆசிரியர் பதவி கிடைத்து விட்டது பாடசாலையும் ஊரையண்டியதாக இருந்தது. அவன் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த போது அவன் கண்ட காட்சி, தாய் செல்லம்மா ரமணாவையும் அபிராவையும் இணைத்தபடி கட்டியணைத்திருந்தாள். ரமணாவின் கைத்தடிக்குப் பதிலாக அபிரா அவனைத் தாங்கிக் கொண்டிருந்தாள். ரமணா ஓர் அநாதை தாய் தந்தை அற்றவன் தனது தாத்தாவுடனேயே வாழ்ந்து வந்தான். அதனால் தான் அத்தனை அன்பான உள்ளம் ரமணாவையும் அபிராவையும் தன் வாழ்நாள் முழுவதும் வைத்துக் காக்க வேண்டிய பொறுப்பு ஆதித்தனுடையதாயிற்று. ரமணாவும் அபிராவும் கூட்டுக் கிளியாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்க அவர்களுக்கு துணையாக தன்னை உருக்கித் தன் மெல்லொளியை பரப்பிக் கொண்டு இருந்தது அந்த ஆதித்தன் என்ற மெழுகுவர்த்தி.

வ.அகிலன்
தரம் $13^A$ கலைப் பிரிவு.

# விழித்தெழு

மாணவர் பலமே தனிப் பலம்
காண வேண்டுமெனில் திரண்டிடும்
ஆணும் பெண்ணு மிதை உணர்ந்திடல் துயர் போகும்

நாடு மாணவர் கையில் உள்ளது
கூடுவா ரெனில் வெற்றியுள்ளது
நாடி நீயிதை நல்லதைச் செய முயல்வாயே!

தோல்வி என்பது இங்கில்லை
நூல் பயின்றிடும் மாணவர் என
நால் விதப் படையும் மலைத்திடும் அறிவாயோ?

கூடிநீ தெருவில் வந்திட
ஓடுமே பகை உலகு விளிப்பு
காடுமேடெலா முன்குரல் கேட்காதோ?

தீது செய்திடும் ஆட்சி வீழ்ந்திட
பாதகச் செயல் செத்தொழிந்திட
மாணவச் சுடரே விழித்தெழு இப்போதே?

# துணிந்தெழு தமிழினமே

தமிழினமே
அடக்குதலுக்கும் ஒடுக்குதலுக்கும்
அடிபணிந்து கிடக்கின்றாய்
கை கட்டி வாய் புதைத்து
மௌனியாய் வாழ்ந்தது போதும்
சுதந்திரக் காற்றை சுவாசிக்க
எழுந்துவா - நம்
கண்களிலே வெப்பம் பிடிக்கட்டும்
வார்த்தைகளில் தீப்பொறி பறக்கட்டும்
மாற்றங்கள் என்பது
மண்டியிட்டுப் பெறுவதல்ல!
மார் தட்டிப் பெறுவது!
காலத்தையும் நேரத்தையும்
தடுக்க நினைத்தாலும் முடியாது - ஆம்!
துணிந்தெழு தமிழினமே - புதிய
அத்தியாயத்திற்காய் புறப்படுவோம்

# துணிந்து நில்

எம் நாட்டு மக்களே!
இளைஞரே! பேரியோரே!
சிங்கத் தமிழினமே!
எம்நாட்டை ஈழத்தை
எழில் நாட்டை பொலி வேட்டை
இழந்து நாங்கள்

மண்மீது மண்ணாகி
மடிவோமோ விடிவெம்மை
நெருங்கிடாதோ?

கண்ணான கண்ணே!
கருவிழியே கவியுலகே
கவலை தள்ளு நீ!

மண்ணாளுங் காலம்
வரும் விரைவில் பெருந்துயரேன்
துணிந்து நில்லு.

# படிப்புச் சுமையல்ல

விடிவுகாலம் வந்தாச்சு
திறமை காட்ட வாருங்கள்
பரீட்சை காலம் என்றாலும்
பதற்றம் தானே வந்துவிடும்

படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர்சுற்றி
வீண் கூட்டம் சேராமல்
வெற்றி காணப் படித்திடுவோம்

நமக்கு முன்பே உயர்ந்தோரும்
நம்மைப் போல படித்தவரே
படிப்பைச் சுமையாய் எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்றிடுவோம்

பொ.கோகிலா
தரம்:-12A
கலைப்பிரிவு (2006)

# விடைபெறும் நேரம்

கல்லூரி வாசல்
கதவு தட்டி வரவேற்க
காலடி எடுத்து வைத்தோம்
நாள் பல கழிந்து போச்சு

முதலிலே அறிமுகமும்
முனகலும் சிரிப்பும் கண்டு
அளவிலா இன்பப்பட்ட
அதிசயம் அறிந்து கொண்டோம்

பல்வேறு திசைகளிலிருந்து
பறந்து வந்த சிட்டுக்கள் நாம்
பல்கலை கற்றிடவே
சேர்ந்தோம் கூட்டினிலே

வளர்கின்ற பயிர்கள் நாங்கள்
வளங்களைப் பெற்றுக் கொண்டே
வளர்த்திட்ட திங்கள் போல
வலுவான அறிவு சேர்த்தோம்

களிப்புடன் வாழ்ந்த வாழ்க்கை
கலைந்திட்ட கோலம் போல
விழி முட்டும் நீரினாலே
வழியெல்லாம் சோகமாச்சு

பாதையிலே போகும் வண்டி
தினமும் பயணங்கள் போகும்
ஏறிய நாம் எல்லோரும்
இறங்கித்தான் ஆகவேண்டும்
விதி என்னும் வடிவில்
விடைபெறும் நேரம் வந்தால்

வ.அகிலன்
தரம் 13
கலைப்பிரிவு 2005

# ஜென்ம பூமி

எங்கள்
ஜனன பூமியே!
உன் பிள்ளைகளையே
மறந்து விட்டாயா?

எங்கள்
ஜென்ம பூமியே!
எங்களை விரட்டி விட்டு
எதிரிகளை ஏன்
அணைத்து வைத்திருக்கிறாய்?

இரவோடு இரவாக
ஒடுகின்ற போது
உன்னை
நம்பித்தானே
எங்கள் உடமைகளை
எல்லாம்
விட்டு விட்டு வந்தோம்

இப்போது
எங்களையும் மறந்து,
எங்கள் உடமைகளையும்
மறைத்து வைத்திருக்கிறாயே!

பாய் விரித்து படுத்துறங்கிய
தாய் நிலமே!
எம்மை பரிதவிக்க விட்டு விட்டு
பகைவருக்கி
பாதுகாப்பு வலயமாக
முந்தானை விரிப்பது
உனக்கே சம்மதமா?

நெல் குவித்த
எங்கள் வயிற்றாயே!
நீ இப்போது
செல் குவித்து வைத்திருப்பது
ஏன் என்பதைச்
சொல்?

புளையர்கள்
குடி புகுவதற்காக
புது மனை கட்டி
குடி புகாமல்
ஓடி வந்தோம்?

# உரிமைக்காய்

சுடுகாட்டில்
சுடர்விட்டு எரிகிற போதும்
சுதந்திர தாகம்
அடங்குமா என்ன?

நிணமாய் வழிந்து
பணியாய் உறைந்து
மணலாய் உலர்ந்து – பின்
புழுவாய்ப் பிறந்து
புயலாய்ப் புறப்படுவோம் .....
எங்கள் உரிமைக்காய் ........

# தேசிய செல்வம்

மண்ணைத் திருத்தி மணியைப் புகுத்தி மறு பெயர்க்கும்
உண்ணக் கொடுக்கும் உழைப்பான ரூக்க உதவிதனை
எண்ணிப் பெரும் பொங்க லென்றும் இயற்றியே இந்நிலத்தின்
கண்ணே உழவென்று காப்புக் கனத்தினைக் காட்டுவமே!

பெட்டிப் பணத்தினைக் கொட்டிப் பிரையாசப் பேர்வயலால்
நட்டம் அடைந்திடு போதும் நலிவுறார் நல்லுழவோர்
வட்டி கொடுத்தேனும் மற்றோர் பணத்தினை வாங்கியவர்
கெட்டித் தனத்தொடு கீர்த்திப் பெருந் தொழிற் தேடுவரே!

கட்டழகாகிய காயத் திருந்தே கனவியர்வை
கொட்டி உழுதிடு வார்முதல் கொள்ளும் குளிர்மழையாய்
ஒட்டி உலர்ந்திடும் உந்திக் குதவிடும் உத்தமர்கள்
தட்டி எழுப்பிடு வாருல கத்தினைத் தம்வசமே

வெய்யிற் கொதிப்பினில் பெய்யும் மழையில் மிகுபனியில்
மெய்யும் மெலிந்திடக் கையும் வரண்டிடு வேளைதனில்
வையத் தகம்விளைந் துய்வை வழங்கிடும் மாபயிர்கள்
கையில் தரும்கதிர் கண்ணைத் துடைத்திடும் காதன்மையோ.

ஊரெங்கும் மூக்கமாய் உற்பத்தி ஈட்டுநல ஒற்றுமையால்
பேரின்பம் ஓங்கியே பேதமும் நீங்கும்ப் பெற்றியதால்
பாரெங்கும் பண்புமெய்ப் பாங்கும் பலமும் நேர்ப் பக்தியெழும்
சேருங்கள் தேசிய செல்வம் நிகழ்வுறச் செய்வதற்கே!

பா.யசிந்தா
வர்த்தகப் பிரிவு

# அது ஒரு காலம்

மங்கையின் விழியிலும்
மௌனத்தின் மொழியிலும்
கொங்கையின் பொலிவிலும்
கெட்டதோர் காலம்

சுதந்திர வேட்கையோடு
தமிழ்த் தேசியம் கூட்டி
இதந்தரு மேடையிலோர்
இங்கிதமாய் சிலகாலம்

இடம்பெயர்ந்த அகதியாய்
கடன் வாங்கிய ஏழையாய்
குடம் உடைந்த சகதியாய்
தடம் புரண்டதோர் காலம்

விமானத்தின் மூச்சிலும்
எறிகணை வீச்சிலும்
மயானத்தின் காற்றிலும்
சிறைவாசம் ஓர் காலம்

வி.தேனினி
தரம் 13 B (கலைப்பிரிவு 2005)

# போர்வை ஒன்று வேண்டிவா அது போதும்

புதியதோர் விடியலின் கனவுகளாய்
பூபாலம் இசைக்கப் புறப்பட
புத்தாண்டே வருக

உனக் கென்ன
பன்னிரண்டு மாதங்கள்
பருவத்தேர் பவனிவந்.து
எண்ணிரண்டு வயதைப் போல்
எழில் காட்டிப் புலர்ந்து விட்டாய்

புத்தெழிலாய் வருவாய் என்று
புதுவாழ்வு தருவாயென்று
எத்தனை காலங்கள்ஓடிமறைந்தன பார்
புதிதாக இன்றும்
என்னதான் சொல்லிக் கொண்டு
ஏமாற்ற வந்திருக்கிறாய்

தமிழர்கள் வாழ்விலே தடக்கியே வீழ்ந்து
தறிகெட்டு நிற்பதைத் ......................
தடுக்கவா வருகிறாய்
புத்தரின் நெறிகளை பொய்மையில் புதைத்து
யுத்தங்கள் தொடர்வதை
நிறுத்தவா வருகிறாய்

புத்தாண்டே நீ - அறிவாயா
இந்த மண்ணிலே
பசித்தழும் பிள்ளை [illegible] பசிதீர்க்க வழியின்றி
கலங்கியே தவிக்கிறது நம் தமிழினம்

தொட்டில் கட்டி குழந்தையை
தூங்க வைக்க வழியின்றி
கொட்டும் பனி மழைக்குள்
முடங்கியே மரணிக்கின்றது

புத்தாண்டே நீவரும் போது
பொன் பொருள் எதுவும் வேண்டாம்
குளிர் தாங்க முடியவில்லை
முடிந்தால் ...................
போர்வை ஒன்று வேண்டிவா அது போதும்.

பொ.திவாகினி
தரம்:- 12 A
கலைப்பிரிவு 2006

# கணனி எனும் யுகத்தில்

தரணியில் மனித ஆக்கம்
    கணனியே மக்கள் யுகம்
மனிதனே படைத்த இயந்திர மனிதன்
    தரவினைக் கொடுத்தால்
சரியான வரவினைக் கூறுவான்
    இரவு பகலாக இயங்கும் மனிதா உனக்கு

களைப்பு சலிப்பு கண்டதில்லையோ
    வளர்ந்த நாட்டையும் வளரும் நாட்டையும்
அளந்து கூறிடும்
    அறிவுச் சுடரொளி
வல்லரசுகளில் எல்லாம் நீயே
    அண்ட வெளியை அளந்திடும் கணனியே

இன்ரநெற் மூலம் இயங்கவைப்பாய்
    அனு அலை ஆற்றலைஅளந்திடும் மனிதா
விண்கல மின்கல விண் வெளிப் பயணத்தை
    அனுப்பி வைக்கும் அற்புத மனிதா
செய்தித் தொடர்பினில்
    சிதறிய உண்மைகள்

பொறுக்கி எடுத்துப் புரிய வைப்பாயே
    ஊழலை ஒழிக்கும் உத்தம புருசா-அதைக்
காட்டிக் கொடுக்கும் கயவனும் நீதான்
    எங்கும் எதிலும் இனியுன் ஆட்சி
விஞ்ஞான உலகம் விரிந்து வளர்ந்திட
    துரித கதியில் தொழில் நுட்பம் பெறுவோம்

வேலைப் பளுவை குறைத்திடும் நண்பா
    சாலைத் தொழிலைச் சரிவரக் காப்பாய்
கல்வியில் உன்னைக் கற்றோர் .................
    அவனியில் அனைத்தும் காண்பார்
மனிதனே கண்டானென்று
    புனிதமாய் போற்று வோமின்று

# வள்ளுவன் மறந்த வரிகள்

துணிந்தொரு கோவிலில் கும்பிடப் போகையில்
அணிந்திரு அடையாள அட்டை

காசின்றிக் கடைத் தெரு போனாலும் 'ஐ டென்ரி'
பேச்சுக்குள் பேணிடப் பழகு

இரு மொழி பொறித்த தோர் அடையாள அட்டை
பெருமிடர்க் காக்கிடும் பகை

பொலிஸ் ஏட்டுப் பதிவோடு அடையாள அட்டை
ரலி யாகா விட்டாலோ சிறை

பாவனைத் தேய்வும் படமுக மாற்றமும்
தீவினைக் கேதுவாம் தினம்

தூக்கக் கனவில் கடன்காரன் தட்டுதலாய்
கேட்கும் ஐசி யைக் கேட்டு

விண்ணப்பம் போட்டிடின் வாராது வந்திடும்
பின்னால் போய் கையூட்டுச் செய்ததும்.

உடைமையாம் உயிரை எங்கெல்லாம் கோருவார்
கடமையில் கள்வரும் கேட்பர்

செக் பொயின்றில் ஈதின்றி இன்னலாம் பணம் கொண்ட
பிக் பொக்கற் காரனும் அறிவான்

(அறத்துப்பால் குடியியல் 'ஐசி' செயல் வகை அதிகாரம் 134 பின்னிணைப்பு)

R.சுபிதா
தரம்:- 13A
கலைப்பிரிவு 2005

# கற்றுக் கொண்டேன்

பறவைகளிலிருந்து
கற்றுக் கொண்டேன் - அதன்
பாசத்துடன் ஒற்றுமையை

சமூகத்திடமிருந்து
கற்றுக்கொண்டேன் - பிறரை
குறை கூறக் கூடாதென்று

கல்விச்சாலையிலே
கற்றுக் கொண்டேன் - ஒழுக்க
சீலராய் வாழ்வதற்கு

நண்பியிடமிருந்து
கற்றுக் கொண்டேன் - நட்பு
இனிமையானதென்று

உறவுகளிடமிருந்து
கற்றுக்கொண்டேன் - என்றும்
எரிச்சல் படக் கூடா தென்று

என் தாயிடமிருந்து
கற்றுக்கொண்டேன் - குடும்பத்திற்காய்
அவரைப் போல் வாழ்வதென்று

பூமித் தாயிடமிருந்து
கற்று;க்கொண்டேன் - என்றும்
பொறுமையாய் வாழ்வதற்கு

என் ஈழத்தாயிடமிருந்து
கற்றுக்கொண்டேன் - என்
உயிரை இழந்தாலும் - உரிமையை
இழக்கக் கூடாதென்று

சு.வினோஜா
தரம் 12 A
(கலைப்பிரிவு 2006)

# சமாதானத்தை வரவேற்போம்

இரத்தத்தை சிந்த வைத்து
உயிரையே உறிஞ்சிச் செல்லும்
ஆயுத சப்த மின்றி மன அரங்கினிலே
சமாதான சிந்தையுடன் சாதி மத
வேற்றுமை இன்றி சமத்துவத்துடன்
யுத்தமில்லா புத்தம் புதிய
நாட்டினை உருவாக்க சகலரும்
சமாதானத்தை ஆசியுடன் வரவேற்போம்.

# நீ தினமும் போராடு

இலட்சியங்கள் என்றென்றும்
தொடர் கதையாகத்
தொடரட்டும்
உன் இறுதி மூச்சு
உள்ள வரை
உன் இலட்சியத்தை - நீ
கைவிட்டு விடாதே
கனவுகள் கண்ணோடும்
இலட்சியங்கள் நெஞ்சோடும்
உன்னை வெல்ல
யாருமில்லை
உறுதியோடு - நீ
தினமும் போராடு !

வ.யசோதரன்
தரம் :-13 A
கலைப்பிரிவு 2005

# பொது அறிவு

1. யூரோ – 2004 ஆண்டு யூரோக்கிண்ணத்தை முதன் முதலாக கைப்பற்றிக் கொண்ட நாடு எது?

கிரீஸ்

2. 2007ம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கட் பேட்டி நடைபெறவுள்ள நாடு எது?

மேற்கிந்தியத் தீவுகள்

3. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள இடம் எது?

லண்டன்

4. உலகத்திலே மிகப் பெரிய நூலகத்தின் பெயர் என்ன? எந் நாட்டில் உள்ளது?

நூலகம் - தேசிய கயூன்

நாடு – அமெரிக்கா

5. நாக்கிலே சுவையரும்பு இல்லாத உயிரினம் எது?

திமிங்கிலம்

6. 13 வது சார்க் மகாநாடு நடைபெற்ற நாடும் இடமும் எது?

நாடு – பாகிஸ்தான்

இடம் - இஸ்லாமாபாத்

7. G8 நாடுகளில் கடைசியாக இணைந்த நாடு எது?

ரஷ்யா

8. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள இடம் எது?

நியூயோர்க்

9. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் எங்குள்ளது?

சுவிஸ்லாந்து

10. உலகிலேயே திராட்சை அதிகம் விளையும் நாடு எது?

பிரான்ஸ்

11. உலகிலே மிகப் பெரிய கம்யூனிஸ்ட் நாடு எது?

சீனா

12. பொது நலவாய நாடுகளின் 2003 மகாநாடு நடைபெற்ற இடம் எது?

நைஜீரியாவின் தலைநகர் அபுயாவில்

13. முதன் முதல் எய்ட்ஸ் பரவிய நாடு எது?

ஐக்கிய அமெரிக்கா

14. 2004 ஆம் ஆண்டு தகவல் தொழிநுட்ப மகாநாடு நடைபெற்ற நாடு எது?

சுவிஸ்லாந்திலுள்ள ஜெனிவாவில்

15. 27/12/2003 இல் பெரும் புவி நடுக்கம் நடைபெற்ற நாடு எது?

ஈரான் ( பாம் நகரில் )

வ.யசோதன்
தரம்:-13
கலைப்பிரிவு (2005)

# "Light House School"

In our country government spends large amounts of resources money, materials and men in the teaching of English. But few make use of this opportunity.

There are many reasons for decline in the standard of English language in our Schools. One reason may be unrest situation prevailed throughout the country for several years. Now everyone realies the danger of neglecting English language.

In order to develop the standard of English through activities using modern equipment and trends in schools government has organised the "Light House" School scheme in Feb 2004. For this project, 100 schools have been selected through out the island. One School from each Education zone has been selected by Zonal Director of Education. These Light House Schoolls are functioning as model School in every zone. Now these schools are being provided with essential facilities such as resource room and necessary equipments for a better teaching – learning of English language.

Every Light house School has an activity room with more facilities. Many books and materials are available to utilize by different level of students. The material resources pooled in these Schools can be utilized whenever the students from other Schools are brought in or when other teachers come to select material or teaching aids. The purpose of providing all these facilities is every child must learn English language through games and activities. Light House Schools like to have healthy relationships with other schools in the zone for mutual benefit. By doing workshop activities and other programmes in this light house school all the schools disseminate best practices with other schools in the zone. Light House schools are expected to organize a lot of Intra school and Inter school activities for language improvement

Our School Meesalai Veerasingam M,V has been selected as one of the Light house schools for Thenmaradchi zone. It has been functioning since Feb 2004. We are able to conduct many programmes successfully as our school principal and other teachers have positive attitudes. That is one of the selection criterias of Light House School. We organised some programmes in during the year 2006. An English

Eduction Camping programme was one of the main events. About 60 students and 15 teachers took part in this programme. All principals and teachers from other schools extended their kind co-operation.

The major aim of the Light House project is enabling the students and teachers to become able users of English Language through activities using modern equipments and trends. We hope to organise more programme this year too. We are always ready to provide chances to utilize the existing resources in our school for the betterment of every student in our zone.

Our Motto is **Let's Shine together**

Mr.T.Thaventhiran.
Teacher in Charge.

# Read Widely

Happy is the man who acquires the habit of reading when he is young. Good books should be read again and again. Books that we had read in our child hood are like our old friends. There is a saying "Do not waste any part of your time do not allow even a minute to pass with out the best use of it. This says clearly that time is previous and we should not waste it. Books are no doubt, our best companions. A person can be called a full man if he reads. widely and gains sufficient knowledge.

The famous English author Sir Frances Becon said "Reading maketh a full man" So reading is very importannt for every body. Books contain a wealth of wisdom. Reading is the best hobby. A person who has a good collection of books will never feel lonley. There are many books which you can read for pleasure and profit.

Reading is a very important skill in the process of education. Reading a book is like taking to its author.

The authors are ready to share their knowledge, their wisdom and their emotions

P.Janany

Grade 11C

# The importance of learning English

Although there are many languages in the world, English is the foremost of them all. All agree that it is the leading international language. It is the language that is spoken everywhere in the world.

Every country in the Asia and in Africa teach English in its schools to all their pupils because it is a language of knowledge. In most of these countries it is taught either as a first or second language.

In Srilanka English is also used as a link language. A good knowledge of English is must. We have no good books in our language. Hence we are unable to learn modern sciences. Even students who do arts and commerce need a sound knowledge of English.

A good knowledge of English is useful to all students of higher studies.It will also help us to go anywhere in this world for employment.Today many of our friends go to foreign countries for employment need English.

English as it is , a gift to us from Britain . It makes us full , it increase our knowledge , it betters our skills . it helps us to find good jobs anywhere. English is one of the official language of the United Nations.

Therefore it is very important that we learn good and better English. If we fail , we will become backward and future will be bleak.

**T.Mathanika**
**A/L – Commerce - 2008**

பின்னிணைப்பு

# தமிழ்த் தினப்போட்டி – 2004
## கோட்ட மட்டம்

| பகுதி 1 | | | |
|---|---|---|---|
| பிரிவு | விடயம் | நிலை | மாணவர் பெயர் |
| 1 | வாசிப்பு | 3 | செல்வி.ச.சோபிதா |
| 4 | கட்டுரை வரைதல்<br>இலக்கியம் நயத்தல் | 1 | செல்வி.ப.ஜனனி |
| 5 | தமிழியற் கட்டுரை | 1 | செல்வி.க.சுபேதிகா |
| 4 | இலக்கணப் போட்டி | 2 | செல்வி.க.பிரசன்னா |
| 5 | இலக்கணப் போட்டி | 2 | செல்வி.க.சுபேந்தினி |
| 1 | பேச்சு | 1 | செல்வன்.சி.ரூபகானன் |
| 2 | பேச்சு | 3 | செல்வி.சி.லக்சியா |
| 3 | பேச்சு | 1 | செல்வி.சி.அகல்யா |
| 4 | பேச்சு | 1 | செல்வி.போ.சசிதா |
| 5 | பேச்சு | 1 | செல்வன்.க.சுதாஸ்கரன் |
| 2 | பாவோதல் | 1 | செல்வி.பா.நிலாஜினி |
| 4 | பாவோதல் | 2 | செல்வி.ஜெ.சிந்துஜா |
| | | | |
| பகுதி 11 | | | |
| 1 | இசையும் அசைவும் | 1 | செல்வி.வி.தர்ஷனா |
| திறந்த போட்டி | தமிழறிவு வினா விடை | 1 | செல்வன்.க.சுதாஸ்கரன்<br>செல்வன்.இ.மதீஸ்வரன்<br>செல்வி.கி.நிசாந்தினி<br>செல்வி.சி.சுபேந்தினி<br>செல்வி.க.சுபேதிகா |
| 1 | நடனம் - தனி | 1 | செல்வி.பு.ஜென்சி |
| 2 | நடனம் - தனி | 3 | செல்வி.ஆ.கஸ்தூரி |
| 3 | நடனம் - தனி | 2 | செல்வி.க.கங்கா |

## கணித விஞ்ஞான விநாடி வினாப் போட்டி - 2004
## (எழுத்துப் பரீட்சை)

| பிரிவு | வகுப்பு | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| I | 6 | 2 | செல்வன்.ச.கஜேந்திரன் |
| | 7 | 1 | செல்வன்.அ.சஞ்சீவன் |
| | | 3 | செல்வன்.சி.இராகவன் |
| | 8 | 1 | செல்வி.க.கோபிகா |
| | | 3 | செல்வன்.அ.குலோஜனன் |
| II | 9 | 5 | செல்வி.த.கெங்கா |
| | 10 | 2 | செல்வன்.க.பிரசன்னா |
| | | 3 | செல்வன்.ந.பகீரதன் |
| | | 4 | செல்வன்.கு.துவாரகன் |
| | 11 | 5 | செல்வி.ப.ஜனனி |

## Zonal Level English Day Competition
## Thenmaradchy Zone

| Grade | Event | Place | Name |
|---|---|---|---|
| 7 | Copy Writing | $2^{nd}$ | Miss.V.Salini |
| 9 | Copy Writing | $2^{nd}$ | Miss.S.Agalya |
| 10 | Copy Writing | $3^{rd}$ | Miss.K.Suhirthini |
| 13 | Copy Writing | 1st | Miss.K.Nisanthini |
| 6 | Dictation | $3^{rd}$ | Miss.Y.Lanoja |
| 10 | Dictation | $3^{rd}$ | Miss.R.Kesika |
| 7 | Dictation | $2^{nd}$ | Miss.B.Nilagini |
| 11 | Dictation | 3rd | Miss.P.Janani |
| 8 | Creative Writing | $2^{nd}$ | Miss.V.Gobika |
| 4 | Listening | Merit | Miss.N.Thausika |
| 4 | Listening | Merit | Mas.S.Rubakanan |

## வலயமட்ட சமூகக்கல்வி பொது அறிவு 2004

| பிரிவு | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 6,7 | பா.நிலாஜினி | 1ம் |
| 8,9 | அ.கார்த்திக் | 4ம் |
| | சி.கஸ்தூரி | 4ம் |
| 10,11 | ப.ஜனனி | 4ம் |
| | [illegible] | 4ம் |
| 12,13 | த.உஷாந் | 1ம் |
| | சி.கமலாகரன் | 3ம் |

## வலயமட்ட சமூகக்கல்வி ஆக்கத்திறன் 2004

| ஆக்க வகை | நிலை | மாணவர் பெயர் | தலைப்பு |
|---|---|---|---|
| புகைப்படம் | 5 | அ.கிருசாந் | சிகிரியா ஓவியம் |
| மாதிரி உருசெதுக்கல் | 5 | ம.சுஜீவன் | சேது சமுத்திரம் |
| நவீன தொழினுட்பம் | 2 | சி.அகல்யா | தென்னாசிய நாடுகள் |
| நவீன தொழினுட்பம் | 4 | ப.பாலமுருகன் | நீர் வில்லை |
| செயற்றிட்டம் | 4 | க.மயூரன் | க.பொ.த (சா/த) பெறுபேறு |
| செயற்றிட்டம் | 5 | தே.கீர்த்தனா | பாடசாலை வரலாறு |
| வரலாற்றுக் குறிப்புக்கள் | 4 | இ.கேசிகா | தேசிய வீரர்கள் |

## வலயமட்ட அறநெறிப் போட்டி 2004

| தரம் | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1 | சிறப்புத் தேர்ச்சி | த.மதுசா |
| 1 | சிறப்புத் தேர்ச்சி | வி.கவிநயா |
| 1 | தேர்ச்சி | சி.விசாலி |
| 2 | சிறப்புத் தேர்ச்சி | கு.பிரியங்கா |
| 2 | சிறப்புத் தேர்ச்சி | க.லக்ஷினி |
| 2 | தேர்ச்சி | சி.அனோஜிகன் |
| 3 | தேர்ச்சி | வி.கௌதமி |
| 4 | தேர்ச்சி | நா.தனுசிகா |

## வலயமட்ட திருக்குறள் மனனப் போட்டி 2004

| தரம் | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1 | சிறப்புத் தேர்ச்சி | த.மதுசா |
| 2 | தேர்ச்சி | சி.அனோஜிகன் |
| 3 | தேர்ச்சி | வி.தர்சனா |
| 3 | தேர்ச்சி | ப.துவிதா |
| 4 | சிறப்புத் தேர்ச்சி | நா.தனுசிகா |
| 5 | சிறப்புத் தேர்ச்சி | பா.தர்சனா |

## கணித விஞ்ஞான விநாடி வினாப் போட்டி (வாய்மொழி)
## மகாணமட்டம் – 2004

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 6 | ச.சுஜேந்திரன் |
| 8 | வ.கோபிகா |
| 11 | ப.ஜனனி |

## வலய மட்ட கையெழுத்து சஞ்சிகைப் போட்டி – 2004

| பிரிவு | ஆக்கத் தலைப்பு | இடம் |
|---|---|---|
| பாலர் மேற்பிரிவு, | சமாதான அருவி | 3 |
| 2 | சமாதான ஒளி | 2 |
| 3 | சமாதான தளிர் | 3 |
| கல்லூரி நிலை | சமாதானத் தென்றல் | 1 |

## ஐக்கிய நாடுகள் தினப் போட்டி – 2004

| தரம் | பெயர் | விடயம் | நிலை |
|---|---|---|---|
| 10 | கை.பிரசன்னா | கட்டுரை | 2 |
| 10 | ந.பகீரதன் | கட்டுரை | பாராட்டு |
| 11 | ப.ஜனனி | கட்டுரை | 2 |
| 11 | [illegible] | கட்டுரை | பாராட்டு |
| 13 | க.சுதாஸ்கரன் | பேச்சு | 2 |

## மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி – 2004

| நிகழ்ச்சி | பிரிவு | நிலை | பெயர் |
|---|---|---|---|
| பேச்சு | 1 | 2 | சி.ரூபகானன் |
| பாவோதல் | 2 | 2 | பா.நிலாஜினி |
| நடனம் தனி | 1 | 3 | பு.ஜெஜ்சி |

## சைவசமய அறிவுப் போட்டி – 2004

| தரம் | நிலை | பெயர் |
|---|---|---|
| 6,7 | 2 | பா.நிலாஜினி |
| | 2 | க.சஞ்சீவன் |
| | சான்றிதழ் | சு.பகீரதன் |
| 8,9 | சான்றிதழ் | சி.கஸ்தூரி |
| 10,11 | 1 | நா.சுரேகா |
| | 2 | ப.ஜனனி |
| | சான்றிதழ் | மோ.சசீதா |
| 12,13 | சான்றிதழ் | க.சுதாஸ்கரன் |

## தியாகி திலீபன் 17ம் ஆண்டு நினைவு நாள் – 2004

| பிரிவு | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|
| மேற்பிரிவு | 1 | த.உஷாந் |

## வணிக குறுவினாப் போட்டி – 2004

| பெயர் | தரம் | நிலை |
|---|---|---|
| மு.சுதாகர் | 10 | 3 |
| இ.கேசிகா | 10 | சான்றிதழ் |
| ச.சாண்ஜீா | 10 | சான்றிதழ் |
| க.பிரசன்னா | 10 | சான்றிதழ் |
| இ.நிஷாந்தன் | 11 | 2 |
| இ.தர்சிகா | 11 | 2 |
| மோ.சசீதா | 11 | 3 |
| சீ.தினேஸ் | 13 | 3 |
| க.மயூரன் | 13 | சான்றிதழ் |
| ஜெ.கஜன் | 13 | சான்றிதழ் |
| மோ.பிரகாஸ் | 13 | சான்றிதழ் |
| த.உஷாந் | 12 | 1 |
| பு.நவஜீதா | 12 | 2 |
| பொ.தனேசன் | 12 | 2 |
| இ.தயாளன் | 12 | 3 |

## சர்வதேச சிறுவர் தினம் வலய மட்டம் – 2004

| நிகழ்ச்சி | பிரிவு | நிலை | பெயர் |
|---|---|---|---|
| கட்டுரை | கீழ்ப்பிரிவு | 3 | வ.கோபிகா |
| | கனிஸ்ட பிரிவு | 3 | மோ.சசிதா |
| | மேற்பிரிவு | 1 | க.சுபேதிகா |
| கவிதை | மேற்பிரிவு | 3 | பொ.திவாகினி |
| கட்டுரை | மேற்பிரிவு | 3 | ம.சற்குணனேசன் |

## சைவசமய வினாடி வினாப் போட்டி – 2004

தரம் 10,11
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 1ம் இடம்
தரம் 12,13
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 3ம் இடம்

## வணிகக்கல்வி வினாடி வினாப் போட்டி – 2004

தரம் 10,11
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 2ம் இடம்
தரம் 12,13
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 3ம் இடம்

## விவசாய வினாடி வினாப் போட்டி – 2004

தரம் 10
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 3ம் இடம்
தரம் 11
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 3ம் இடம்

## வாரிவளம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் அறநெறிப்பாடசாலை சமய அறிவுப்போட்டி – 2004

| தரம் | நிலை | பெயர் |
|---|---|---|
| 7 | 2ம் பரிசு | க.சஞ்சீவன் |
| 6 | ஆறுதல் பரிசு | பொ.வாகீசன் |
| 7 | ஆறுதல் பரிசு | த.பிரதீபன் |
| 7 | ஆறுதல் பரிசு | இ.சரவணபவன் |
| 6 | ஆறுதல் பரிசு | உ.நிறோஜினி |
| 7 | ஆறுதல் பரிசு | பா.நிலாஜினி |
| 9 | ஆறுதல் பரிசு | பொ.ஆராதனா |
| 11 | 2ம் பரிசு | மோ.சசீதா |
| 10 | ஆறுதல் பரிசு | இ.கேசிகா |
| 11 | ஆறுல் பரிசு | ச.சுமிதா |
| 13 | 3ம் பரிசு | இ.சுவேந்தினி |

## தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் 2004ம் ஆண்டு நடைபெற்ற மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட மட்டத்திற்குத் தெரிவானோர்

| பிரிவு | பால் | விளையாட்டு | இடம் | பெயர் |
|---|---|---|---|---|
| 11 | ஆண் | நீளம் பாய்தல் | 1 | ம.மாலுதன் |
| 11 | பெண் | 100 | 2 | வி.நிரோஜினி |
| 17 | ஆண் | 800 | 2 | க.கோபராஜ் |
| 17 | ஆண் | தட்டு | 2 | க.பிரதீபன் |
| 17 | பெண் | குண்டு | 2 | பு.கஸ்தூரி |
| 19 | ஆண் | குண்டு | 1 | இ.மதீஸ்வரன் |
| 19 | ஆண் | ஈட்டி | 2 | இ.மதீஸ்வரன் |
| 19 | பெண் | குண்டு | 1 | சி.சுபேந்தினி |
| 21 | ஆண் | 800 | 2 | யோ.சுஜீபன் |
| 21 | ஆண் | 1500 | 1 | யோ.சுஜீபன் |
| 21 | ஆண் | முப்பாய்ச்சல் | 2 | யோ.சுஜீபன் |
| 21 | ஆண் | உயரம் பாய்தல் | 1 | தெ.ரஜீபன் |
| 21 | ஆண் | ஈட்டி | 2 | சி.கமலாகரன் |
| 21 | ஆண் | கோல்ஊன்றிப்பாய்தல் | 1 | கு.கேதீசன் |
| 21 | பெண் | 200 | 2 | பா.வனஜா |
| 21 | பெண் | 400 | 2 | பா.வனஜா |
| 21 | பெண் | 800 | 1 | த.குணாளினி |
| 21 | பெண் | உயரம் | 1 | த.குணாளினி |
| 21 | பெண் | தட்டு | 2 | சு.கமலினி |
| 21 | ஆண் | அஞ்சல் | | த.பேரின்பநாதன் |
| 21 | ஆண் | 4x100 | 2 | மு.முருகுந்தகுமார் |
| | | 4x400 | 2 | யோ.சுஜீபன் |
| | | | | ம.உதயராகன் |
| | | | | தெ.ரஜீபன் |
| | | | | சி.கமலேஸ்வரன் |
| 21 | பெண் | அஞ்சல் | | பா.வனஜா |
| | | 4x100 | 1 | த.குணாளினி |
| | | 4x400 | 1 | கி.தயாக்கினி |
| | | | | க.துஸ்யந்தி |
| | | | | சி.யதீஸ்வரி |
| | | | | இ.இராதாம்பிகை |
| 19 | ஆண் | அஞ்சல் | | ச.மதிபுகள் |
| | | 4x100 | | யோ.நேசவன் |
| | | | | இ.மதீஸ்வரன் |
| | | | | செ.தவரூபன் |
| | | | | ம.சற்குணநேசன் |

## பெரு. உள்ளக. கலாசார விளையாட்டுப் போட்டிகளின் வலயமட்ட முடிவுகள்

| | | |
|---|---|---|
| காற்பந்து | 12 வயது ஆண்கள் | 2ம் இடம் |
| | 16 வயது [illegible] | [illegible] இடம் |
| கரப்பந்து | 15 வயது பெண்கள் | 2ம் இடம் |
| | 19 வயது பெண்கள் | 2ம் இடம் |
| மேசைப்பந்து | 19 வயது ஆண்கள் | 2ம் இடம் |
| | 19 வயது பெண்கள் | 3ம் இடம் |
| சதுரங்கம் | 19 வயது ஆண்கள் | 2ம் இடம் |
| | 15 வயது பெண்கள் | 1ம் இடம் |
| பட்மின்ரன் | 19 வயது பெண்கள் | 3ம் இடம் |

## மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி – 2004

| பிரிவு | நிகழ்வு | நிலை | பெயர் |
|---|---|---|---|
| 21 வயது | உயரம் பாய்தல் | 5ம் | த.குணாளினி |

# அறிவுத் துளிகள்

- என்னதான் வாழ்க்கை வசதிகள் பெருகினாலும் பழைய பண்பாட்டின் சுகம் வரவே வராது போலித்தனமான நாகரிகத்தின் உச்சக் கட்டமே கலியுகத்தின் முடிவாக இருந்தால் கூட யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

  கண்ணதாசன்

- அறியாமை உள்ள மனிதன் தனக்கு புரியாததையெல்லாம் பாராட்டிக் கொண்டிருப்பான்

  சீசர் லெம்ப் ரோ சோ

- சோம்பேறித்தனம் ஆரம்பத்தில் சிலந்தி வலை நூலைப் போல மெல்லியதாக இருக்கின்றது. அதை வளர்த்துவிட்டால் அது இரும்பு வலையாகிவிடுகின்றது.

  சேர் மாத்யூ ஹேல்

- ஒரு மனிதன் வாழ்வதற்கல்ல வகைப்படுத்திப் பார்க்கவே எளிதில் கற்றுக் கொள்கின்றான்

  சாமுவேல் ஜோன்சன்

- எல்லா மனிதர்களும் நிலவைப் போன்றவர்கள் எல்லோரிடமும் மற்றவர்களுக்குக் காட்ட விரும்பாத இருண்ட பகுதி இருக்கின்றது.

  மார்க்ட் வெய்ன்

- எல்லா மனிதர்களும் வாழ்க்கையில் வெற்றியுடன் இருக்க புலமையை விட ஒழுக்கத்தின் அளவே காரணம்

  பேடன் பவல்

- ஒரு தேசத்தின் வெற்றிக்கு அதன் ஆயுத பலத்தை விட அதன் பிரஜைகளின் ஒழுக்கத்தின் அளவே காரணம்

  பேடன் பவல்

- உன் நெஞ்சுக்கு துரோகம் செய்யாதே மனச் சாட்சியின் படி நட, நிச்சயமாக உனக்கு வெற்றி உண்டாகும். கள்ளம் கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய் அதை ஈஸ்வரன் கேட்பார்.


  சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்

- மன அமைதியை அடைவதற்கான அடிப்படை வழி அதை தேடி அலையாது இருத்தல் ஆகும்.

  மிஸஸ் காவ்லக் எலிஸ்

தொகுப்பு :- சி.சிவப்பிரியா
தரம் 12A
கலைப்பிரிவு 2006


நன்றி


அமரர்
திரு. வே. வீரசிங்கம்
நினைவுச்சின்னம்